# இந்து தர்மம்

## 1995 வைகாசி ஸ்ரீ



குப்பிழான்
காசிவாசி செந்திநாதையர்

வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "இந்து தர்மம்"

## மாதாந்த ஆத்மீக சஞ்சிகை

வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப் பிடித்தோம்.

மலர் 8 1995 வைகாசி

வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

தனிப் பிரதி : ரூபா 10/-

ஆண்டுச் சந்தா : ரூபா 100/-

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| எமது சிந்தனை | 201 |
| சைவ சித்தாந்த சிகாமணி மகான் செந்திநாதையர் | 203 |
| குப்பிழான் தந்த சிந்தாந்தச் செம்மல் காசிவாசி செந்திநாதையர் | 206 |
| சிவபிரான் சம்பந்தர் உறவு தந்தை தனயன் உறவுபோல்வது | 209 |
| திருக்கூட்டச் சிறப்பு | 211 |
| ஈசனவ னெவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ | 214 |
| "சித்தாந்த இரத்தினம்" கந்தையா கணேசலிங்கம் | 216 |
| ஆலயங்களில் திருமுறை ஓதல் | 217 |
| பண்ணுறத் தெரிந்த பைந்தமிழ் இசைக்கலை | 218 |
| சிறுவர் பகுதி : | |
| இந்திரன் பழிதீர்த்த கதை | 220 |
| நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு — சந்திரன் | 222 |
| சந்தேகம் தெளிதல் | 225 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## எமது சிந்தனை

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
-9-6-1995
யாழ்ப்பாணம்

# அதற்காமாள் ஐயரல்லதில்லை

சைவமத ஸ்தாபன தீரத்திலும் பரமத நிராகரண வீரத்திலும் நல்லை நகர் நாவலர் பிரானுக்கு வல்லதொரு வாரிசாக வாய்த்தவர் செந்திநாதையர். தமது 28 வரை சில வருடங்கள் நாவலருக்கு உடனுதவியாகவும் மேல் 78 வரை தன்னூட்டமாகவும் அத்துறைகளில் மஹத்தான சாதனைகளை நிலைநிறுத்திய மகிமை ஐயரைச் சாரும்.

ஐயரவர்களின் இயற்கை விவேகமும் அறிவாராய்ச்சித் திட்ப நுட்பமும் சமஸ்கிருதத்தில் தன்னிறைவும், ஆங்கிலப் புலமையும், தருக்கத் திறமையும் இவ்வனைத்துக்கும் வளமூட்டும் பக்தி விநய ஒழுக்க சீலங்களும் நாவலர், அவரை விசேடமாக விரும்புமளவுக் கிருந்தனவாகக் கணிக்கப்படும். அன்றைய சமயவாதப் போரில் உறுதியான வெற்றியூட்டும் உபாயமாகப் பொன்சீன் என்ற பாதிரியார் தென்னாட்டு வித்துவான் அருளப்பமுதலியாரை வரத்தித் தமக்குச் சேனாதிபதியாக அமர்த்திக் கொண்டு வாதப் போர்க் கொடி உயர்த்தி நின்ற சமயம் நாவலர் பிரானால் தமக்குச் சேனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் செந்திநாதையர். அத்தொடர்பிலான ஐயரின் அறைகூவலின் ஆக்குரோசத்துக்கு அதிர்ச்சியுற்ற பொன்சீன், ஒரு 'அன்சீன்' (Unseen) பேர்வழி மூலம் ஐயரை அவமதித்துப் போலி எதிர்கூவல் விட்டபோது அப்பேர்வழி நாவலர் கண்டனத்திற் சிக்கிப் பிய்த்துப் பிடுங்கப்பட்ட காட்சி வரலாற்றிற் பதிவு பெற்றுள்ளது.

1878 இல் தம் முப்பதாம் ஆண்டில், நாவலரளித்த நன்னடக்கைப் பத்திரத்துடன் தென்னாட்டு அறிஞர் சமூகத்திற் பிரசித்திபெற்ற ஐயரவர்களால் சைவ நிலைபேற்றுக்கும் சைவசித்தாந்த மேன்மைக்கும் விளைந்த ஆக்கங்கள் அளப்பில. அந்நாளிற் சென்னையின் பல பகுதிகளை ஆக்கிரமித்திருந்த மாயாவாத சண்டமாருதத்தை அநாயாசமாகவே ஆசமனஞ் செய்துவிடும் ஆதிசேஷன் ஆயினார் ஐயர் என்பர். அஃதாவது,

அந்நாளைய மாயாவாதிகள் மகாமாயாசாலவித்தை நிபுணர்கள். வேதோபநிடதங்களிலும் இதிகாச புராணாதிகளிலும் சிவபரத்துவங் கூறும் பகுதிகளையும் பிரமசூத்திரத்தில் சைவசித்தாந்தத் துணிபுகள் வெளிப்படக் கிடக்கும் பகுதிகளையும் இரவோடிரவாக உருமாற்றியும், அழித்தொழித்தும் உண்மைக் கொவ்வாதவற்றை வலிந்து புகுத்தியும் வேத சாஸ்திரங்கள் சர்வபாவங்களினாலும் மாயாவாதமயம் என்ற மயக்கினுள் சைவ உலகை மூழ்கடிக்க முயன்று வந்தனர். அங்கு வெகுநாளாக

1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிடையூருயிருந்து வந்த 'சிந்தாந்தசரபம்' சோமசுந்தரநாயக்கருக்கும் அந்திய காலம் நெருங்கியமையின் ஐயர் தலைக்கே அனைத்துச் சுமையுமாயின. நாயக்கர் அணுகுமுறையிலும் பார்க்கக் கூர்ப்பான ஒரு அணுகுமுறையைத் தெரிந்துகொண்ட ஐயர், மாயாவாதிகள் வேத சாஸ்திரங்களில் திருட்டுத்தனமாக விளைந்த புரட்டுக்களைத் தம் ஆய்வியற் புலமைக் கூர்மையால் இனங்கண்டு நேருக்குநேர் வெளிப்படுத்தலானார். அதனால், மாயாவாதிகள் சாயம்வெளுக்கத் தொடங்கவே வாதப் போர்களின் முன்னணி வெற்றி வீரரானார் ஐயர். அத்துறையில் தாமாக ஈடுபாடு கொண்டணுகிய அந்நாள் சென்னைவாசி, புலோலி, நா. கதிரவேற்பிள்ளையின் சமயோசித வாதத் திறனையும் பிரசண்டவேகப் பேச்சு வளத்தையும் ஆதாயப்படுத்தி நாளடைவில் அவரே பிரதான முன்னணி வீரராகத் திகழ ஊக்கியும் வைத்தார்.

ஐயர் தமது சித்தாந்த ஞானவிவேக வளத்தினால் ஆண்டாளம்மையார் என்ற பக்குவியொருவரைச் சிறந்த சித்தாந்த மேதையாக்கி அவர் மூலம் மரபுமுறையான சைவசித்தாந்தப் பிரசங்கவிசையை முடுக்கிவிட்டார். ஆங்கிலக் கல்விமானான J. M. நல்லசாமிப்பிள்ளை என்பவருக்குச் சைவசித்தாந்த நுண்பொருள் விளக்கப் புதிர்களையூட்டி ஆங்கிலமூலம் சைவசித்தாந்த நூற்பிரசுரமும் நிகழவைத்தார். கீழ்த்திசைக் கல்வியாளரும் ( Orientalist ) சைவசித்தாந்த உண்மை நுணுக்கங்களைத் தாமாக வாசித்துக் காண அடிகோலிவிட்டது இது. இப்புலமை நுணுக்கத்தில் ஐயருக்கு நிகர் ஐயரேதான். அந்நாளில் அவரியற்றிய சிவஞான போதவசனாலங்காரதீபம் என்ற நூல் சைவசித்தாந்த நுண்பொருட் பிரகாசிகை எனற்குத் தகவே தகும்.

மாயாவாதத்தை மழுங்கடிப்பதில் ஐயர் தம் புலநாவிற் கண்ட சுவை அத்துறை ஆய்வில் அவரை மென்மேலூக்குவதாயிற்று. அதற்கு வேண்டுஞ் சகல நூல்வசதி ஆள்வசதிகளுமுள்ள பொருத்தமான சூழ்நிலை தேடிக் காசியை அடைந்த ஐயர், பத்து வருட ஆய்விற் பெற்ற துணிபுகள் கொண்டு மூர்த்தண்யமான கண்டனநூல்கள் பலவற்றை எழுதிப் பிரசுரித்தார். சிவமகிமையையும் சித்தாந்த உண்மை முடிபுகளையுஞ் சிந்தனையின்றித் தூஷித்த கிறீஸ்தவர், சமணர், சங்கரவேதாந்திகள், வைஷ்ணவர் எவருமே அக்கண்டனங்களாற் சிட்சிக்கப்படா தொழிந்திலர். இம்முயற்சிகளிடையேயும் ஐயரவர்கள், அரிதின் முயன்றாக்கிய உபநிடத உபக்கிரமணிகை பிரமசூத்திர உபக்கிரமணிகைகளுடன் கூடிய பிரமசூத்திரமொழிபெயர்ப்பு, தேவாரம் வேதசாரம், சைவ வேதாந்தம் என்பவை அவர்தம் உயர்ரக நூல்களாயிருந்தன. வேதாந்தம் எனப்படும் உபநிடதங்களின் சாரம் சைவசித்தாந்தமே என்பது சைவ வேதாந்தம் என்ற பெயர்ப் பொருள் என அறிதல் தகும். இவற்றால் அகில வேத சாஸ்திரங்களாலும் தெள்ளத்தெளியப் பிரதிபாதிக்கப்பட்டது சைவசித்தாந்தமே என இன்று எவரும் ஆதாரங்காட்டி நிறுவ முடியும்.

அதற்காமாள் ஐயரல்லதில்லை.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சைவ சித்தாந்த சிகாமணி

# மகான் செந்திநாதையர்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
( விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை )

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குப்பிழான் கிராமம் ஒரு திருப்பரங்குன்றமாகத் திகழ்கிறது. சைவ சித்தாந்த கலாநிதி ஆகிய செந்திநாதையர் பிறந்தமையால் இக்கிராமம் புனிதம் அடைகிறது என்பது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் கூற்றாகும். 1848-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ஆம் திகதி குப்பிழான்-சொக்கவளவு, சோதி விநாயகர் ஆலயப் பூசகராக இருந்த சின்னையஐயர் என்பவருக்குப் புத்திரராகச் செந்திநாதையர் தோன்றினார். இவர் தமது மாமனாகிய கதிர்காம ஐயரிடம் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுவந்தார். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பது போல கல்வி, கேள்வி, ஞானங்களில் சிறிய வயதிலேயே சிறந்து விளங்கினார். அன்பு, அருள், வாய்மை முதலிய நற்குணங்களெல்லாம் இளமையிலேயே இவரிடத்தில் அமைந்து விளங்கின. இவர் தமது பத்தாவது வயதிலே யாழ்ப்பாணத்து மத்திய கல்லூரியிலே சேர்ந்து ஆங்கிலக் கல்வியைப் பெற்றார். பின்பு நல்லூர் சம்பந்தப் புலவரிடம் சென்று தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேறினார். 1871 ஆம் ஆண்டிலே தந்தையாரோடு இந்தியாவுக்குச் சென்று சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்து மீண்டார். 1872 - ம் ஆண்டிலே வண்ணார்பண்ணையிலே ஆறுமுகநாவலரால் தாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலையில் ஆறு வருடமும் அவருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒரு வருடமும் ஆசிரியராக இருந்து கற்பித்தார். அக்காலத்தில் நாவலருடைய சமயப் பிரசங்கங்களைத் தவறாது கேட்டு அடிக்குறிப்பு எழுதி வைக்கும் வழமையைக் கொண்டிருந்தார்.

ஐயர் அவர்கள் வண்ணார்பண்ணை வாசியாகிய விசுவநாதையர் என்பவரின் புதல்வியாகிய சிவகாமியம்மையாரை விவாகம் செய்து மீனாட்சியம்மை என்னும் ஒரு புதல்வியைப் பெற்றார். சிலவருட காலத்தில் இவருடைய மனைவியார் இறந்ததும் 1878 - ம் ஆண்டு இவர் நாவலர் வித்தியாசாலையை விடுத்து இந்தியாவுக்குச் சென்றார். அப்போது சென்னையிலிருந்த நாவலரளித்த நன்னடக்கைப் பத்திரமொன்றின் உதவியால் தகுதியான உத்தியோகமொன்றும் வாய்க்கப்பெற்றார். சிலவாண்டுகளில் நாவலர் யாழ்ப்பாணம் மீண்டு தேகவியோகமாயின செய்தி கேட்டு ஐயர் நன்றிப் பெருக்கொழுக எழுதிய இரங்கற்பா வருமாறு: நாவலர் இறந்ததும் செந்திநாதையர் பாடிய இரங்கற்பா இருவருக்குமிடையே இருந்த தொடர்பைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது:

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்னதவஞ் செய்தேனோ யானறியேன் - அன்னதனு
ளுள்ளசில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி.

இவர் 1888 - ம் ஆண்டு தொடங்கி 1898 - ம் ஆண்டுவரை காசியிலே வசித்து வந்தார். இதனால் இவர் காசிவாசி செந்திநாதையர் எனவும் அழைக்கப்படுவார். புலோலியூர் சதாவதானம் திரு. நா. கதிரவேற்பிள்ளை அவர்களுக்கு 'மாயாவாத துவம்ச கோளரி' என்ற பட்டத்தை இவரே சூட்டிக் கௌரவித்தார். 1902-ம் ஆண்டில் திருப்பரங்குன்றத்துச் சந்நிதி வீதியில் வைதிக சுத்தாத்துவ சைவ சித்தாந்த வித்தியாசாலை என்ற பாடசாலையை நிறுவி மாணவர்களுக்குச் சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் உள்ள நூல்களைக் கற்பித்து வந்தார். 1906 – ம் ஆண்டில் இவர் 'செந்திநாதைய சுவாமி யந்திரசாலை' என்னும் பேரில் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவினார். சிவத்தொண்டு புரிந்து வந்த இவர் சில நாட்கள் சுரநோயாற் பீடிக்கப்பட்டிருந்து (15 – 05 – 1924) வியாழக்கிழமை தேகவியோகமடைந்தார்.

இவர் எழுதிய நூல்கள்:

1. தேவாரம் வேதசாரம்
2. நீலகண்ட பாஷிய மொழிபெயர்ப்பு
3. கந்தபுராண நவநீதம்
4. சாண க்ஷத்திரியப் பிரசண்ட மாருதம்
5. ஞானபோத விளக்கச் சூறாவளி
6. சிவனுந் தேவனா? என்னுந் தீயநாவுக்கு ஆப்பு
7. வஜ்ரடங்கம்
8. ஞானரத்தினாவளி
9. வீரபத்திராஸ்திரம்
10. விவிலிய குஞ்சித கண்டன திக்காரம்
11. ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவ காருண்ய மாட்சி
12. வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பாட வினாவிடை
13. விவிலிய குறிஞ்சிதக் குறிப்பு
14. வச்சிர தண்டம்
15. தாந்திரிக துண்ட கண்ட கண்டனம்
16. மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம்
17. சிவஞானபோத வசனாலங்கார தீபம்
18. தத்துவ விளக்கம் – மூலமும் உரையும்
19. சைவ வேதாந்தம்

காசிவாசி செந்திநாதையர் காசியில் தங்கியிருந்த காலத்தில் சமஸ்கிருத மகா பண்டிதர்களின் மத்தியில் இருந்து வேத உபநிடதங்களையும், பிரம்மசூத்திரத்திற்குச் சங்கரரும் பிறரும் எழுதிய விளக்கங்களையும் எழுத்தெண்ணிப் படித்தார். நீலகண்ட சிவாசாரியார் பிரம்ம சூத்திரத்திற்குச் செய்த பாஷியத்தைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார். இவர் எழுதிய நீலகண்ட பாஷிய தமிழ் மொழிபெயர்ப்பின் முகப்பில் இரு நீண்ட உபக்கிர மணிகைகள் தந்திருக்கிறார். உபநிடத உபக்கிரக மணிகை இரண்டு, பிரம்ம சூத்திர உபக்கிரக மணிகை. இவை இரண்டும் சைவசித்தாந்த கலாசாரமாகிய சரபத்தின் இருசிறகுகள் போலக் காணப்படுகின்றன. வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் எல்லாம் ஆராய்ந்து ஆக்கப்பட்டவைகளே இந்த உபக்கிரக மணிகைகள் ஆகும்.

தமிழ் நாட்டிற்கும் தாம் பிறந்த ஈழ நாட்டிற்கும் மகான் செந்திநாதையர் அளப்பரிய சேவை செய்திருக்கிறார். மாயாவாத மாருதத்தை ஆசமனஞ் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். தென்னிந்தியாவிலே நல்லசாமிப் பிள்ளை அவர்கள் சைவ சித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நூல்கள் வெளியிடுவதற்கும் ஆண்டாளம்மையார் சைவ சித்தாந்த மழை பொழிவதற்கும் இவர் உறுதுணையாக இருந்தார். ஈசான சிவாசாரியார் சைவ மழை பொழிவதற்கும் இவரே காரணமாக இருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சிக்கும் தேசிய எழுச்சிக்கும் வித்திட்ட பெருமை சைவத்தின் காவலராகிய நாவலர் பெருமானுக்கே உண்டு. நாவலர் பாரம்பரியத்தை இந்த மண்ணில் நிலைபெறச் செய்வதில் செந்திநாதையர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் உயர்வானது. புதிதுபுதிதாகத் தோன்றி மறையும் கலாசாரங்கள் ஞானபூமியாகிய யாழ்ப்பாணத்தை இடையிடையே எட்டிப் பார்ப்பது உண்டு. ஆனால் யாழ்ப்பாண மண்ணில் இவைகள் நின்று நிலைப்பதில்லை. தாமரையிலையில் நீர் போல உருண்டு புரண்டு ஓடிவிடும். நாவலரும் அவருடைய ஞானவாரிசுகளும் செய்த பணிகளையும் வாழ்ந்த வாழ்க்கை நெறிகளையும் அடுத்த சந்ததியை அறியவிடாமல் இருட்டடிப்புச் செய்யச் சிலர் முனைந்தார்கள். நாவலர் பெருமான் உயிரோடு இருக்கும் பொழுது பயந்ததிலும் பார்க்கச் சிலை வடிவமாக நல்லைக்கந்தன் ஆலயத்தில் சிவக்கோலத்தோடு வீற்றிருந்ததைப் பார்த்துச் சிலர் நடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள். இரவோடிரவாகச் சிலை இருந்த இடத்தில் இருந்து பெயர்க்கப்பட்டது. நாவலரின் ஞானவாரிசுகள் வேதனையும் விரக்தியும் அடைந்தார்கள். மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் பணிகள் பல செய்தவர்களின் செயற்பாடுகளை மறைப்பது கூட ஒரு வரலாற்றுத் துரோகம் என நினைத்தார்கள். நினைத்தவர்களின் எழுச்சியினால் மகான் காசிவாசி செந்திநாதையர் பிறந்த மண்ணாகிய குப்பிழான் கிராமத்தில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 1983-ம் ஆண்டில் அவருக்கு ஒரு நினைவுச் சிலை எழுப்பினார்கள். செந்திநாதையரின் பணிகளைப் பற்றிப் பலர் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சைவ சிந்தாந்த தத்துவத்திற்கு ஐயர் ஆற்றிய பங்களிப்பினை அனைவரும் உணர ஆரம்பித்து விட்டார்கள். உலகில் வாழும் சைவத் தமிழருக்கெல்லாம், நாவலர் காலம் போல யாழ்ப்பாணம் தலைமை தாங்கி வழி காட்டுங் காலம் மிக விரைவில் வரத்தான் போகிறது.

---

## வாழ்வளிக்கும் மந்திரம்

தனக்கு வந்திருக்கும் நோய் மிகக் கொடுமையானது என்றும் அது க்ஷயரோகம் என்றும் அதைக் குறித்த விவரங்கள் அனைத்தையும் ஒரு நபர் குருதேவர் சிவானந்த மகராஜிடம் சொல்லிக்கொண்டிருந்தார். குருதேவர் அதை மிகக் கவனமாகக் கேட்டார்.

"இப்பொழுது இருமலோ காய்ச்சலோ கிடையாது. உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கிறது. நான் சாதாரணமாக இருப்பதாக உணர்கிறேன்" என்றார் அந்த நபர்.

"இப்பொழுது உங்களுக்கு வியாதி குணமாகிவிட்டது. கொஞ்சம் கற்பனைப் பலவீனத்தைத் தவிர வேறு கவலைப்படத் தக்கது ஒன்றும் கிடையாது. கொஞ்சம் ஆழ்ந்த பிராணாயாமம் செய்யுங்கள்" என்று கூறிய குருதேவர் பிராணாயாமம் எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் செய்து காண்பித்தார். காலையில் சிறிய தூரம் நடக்கச் சொன்னார். நல்ல சத்துணவைச் சாப்பிடச் சொன்னார். "எல்லாவற்றிற்கும் மேலான டானிக் மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரம்" என்றார் குருதேவர்.

"ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாமிருதாத்"

என்று அந்த மந்திரத்தை ஜபித்துக் காட்டினார். காலையில் பத்துத்தடவையும் மாலையில் பத்துத் தடவையும் இந்த மந்திரத்தை ஜபிக்குமாறு கூறினார். மேலும் இந்த மந்திரம் செய்த அற்புதங்களையும் விளக்கிக் கூறினார்.

"பங்களூரில் ஒரு சுகாதார அதிகாரி இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். டாக்டர்கள் கைவிட்டு விட்டனர். எனது அகில இந்திய யாத்திரையின்போது நான் பெங்களூருக்குச் சென்றிருந்தேன். அந்த ஆபீசர் என்னை வந்து பார்த்தார். நான் அவருக்கு இந்த மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை உபதேசம் செய்தேன். அவர் தவறாமல் நாள்தோறும் இதை ஜபித்து வந்தார். நோய் நீங்கிச் சௌக்கியம் அடைந்தார்.

"டெஹ்ரானில் நடந்த ஒரு விமானவிபத்தில் ஒருரைத் தவிர ஏனையோர் அனைவரும் கொல்லப்பட்டனர். இந்த ஒரு நபர் மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். அவர் காப்பாற்றப்பட்டார்.

"பலர் தாங்கள் நோயினால் அவதிப்படும் செய்தியை எனக்குத் தெரிவிக்கிறார்கள். நான் நாள்தோறும் மூன்று தடவை அவர்கள் குணமடைய இந்த மந்திரத்தை ஜபம் செய்கிறேன்" என்றார் குருதேவர்.

வந்தவர் மிகுந்த உற்சாகத்துடன் குருதேவரை வணங்கிச் சென்றார்.

நன்றி — சமயஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# குப்பிழான் தந்த சித்தாந்தச் செம்மல் காசிவாசி செந்திநாதையர்

க. கணேசலிங்கம்
( செயலாளர், செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான் )

தமது நாற்பதாவது வயதிலே அறிஞரொருவர் காசிக்குச் செல்கிறார். காசியிலே வடமொழி வல்ல பண்டிதர்களிடம் வேதாகம நூல்களைக் கற்கிறார். பல ஆராய்ச்சிகள் செய்கிறார். இந்தப் படிப்பும் ஆராய்ச்சியும் பத்து வருடங்கள் நீடிக்கின்றன. இடையில் நேபாளம் சென்று மன்னரின் நூல்நிலையத்தில் பல வடமொழி நூல்களையும் ஆராய்கிறார். ஏற்கனவே இவரிடம் இருந்த ஆங்கில அறிவும் தமிழ்ப் புலமையும் இந்த ஆராய்ச்சிகளுக்குத் துணை புரிகின்றன. இதன் பயனாகப் பல அரிய நூல்களை எழுதுகிறார். இவரின் ஆழ்ந்த அறிவும் தன்னலமற்ற பணிகளும் சித்தாந்த சிகாமணி", "சித்தாந்த ஞானபானு" முதலிய பல பட்டங்கள் கிடைக்க உதவுகின்றன. சைவ உலகின் ஞானக்குன்றாக விளங்குகின்றார்.

இந்த அறிஞர் வேறு யாருமில்லை. இவரே செந்திநாதையர். இவரைப் பெற்றதால் குப்பிழான் கிராமம் பெருமை பெற்றது. பத்து வருடங்கள் (1889-1898) காசியில் வாழ்ந்ததால் "காசிவாசி செந்திநாதையர்" என்று பலராலும் அழைக்கப்படும் செந்திநாதையர் கீலக வருடம் (1848) ஐப்பசி மாதம் 2ஆம் திகதி பிறந்தவர். தந்தை சின்னையஐயர்; தாய் கவுரியம்மை. சம்புநாதையர், பொன்னையா என்ற இளைய சகோதரர் இருவர் உண்டு.

ஆரம்பத்தில் தமது மாமனார் கதிர்காம ஐயரிடம் தமிழும் வடமொழியும் படித்த செந்திநாதையர் ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் பயின்றார். நல்லூர் சம்பந்தப் புலவரிடம் தமிழ், இலக்கியம், இலக்கணம் பயின்றார். ஆறுவருடம் (1872 - 1877) நாவலரின் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஒருவருடம் அவரின் ஆங்கில வித்தியாசாலையிலும் ஆசிரியப் பதவியில் அமர்ந்து பணிபுரிந்தார். இந்த ஏழு வருட காலத்தில் நாவலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு செந்திநாதையருக்குக் கிட்டுகிறது. ஆசிரியத்தொழில் பார்க்கும் நேரத்தைவிட மிகுதி நேரங்களில் நாவலரிடம் பாடங்கேட்டும், அவரின் பிரசங்கத்தைக் கேட்டுக் குறிப்பெழுதியும் தம் பெரும்பொழுதைக் கழிக்கிறார். இவர் பற்றிப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது கந்தபுராண கலாசாரம் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும்பணியைச் செந்திநாதையர் சைவ சமயத்துக்குச் செய்திருக்கிறார்..... அவர் யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தின் ஒரு பிரதிநிதி. அவரைப்பற்றிப் பிரத்தியேகமாக அறிதல் வேண்டும்"

நாவலர், செந்திநாதையர் போன்றோர் வாழ்ந்த காலம் அந்நியமத ஊடுருவல் தீவிரமாக நடந்த காலம் என்பது வரலாறு கண்ட உண்மை. சைவசமயத்தை நிந்தித்தும் எமது சமய தத்துவங்கள் புராணங்களைப் பழித்தும் பிற மதத்தினர் பிரசாரஞ் செய்தனர். அவர்களின் பிரசாரத்தில் மயங்கிப் பலர் மதம்மாற முற்பட்டனர். உணவு, உடை, உத்தியோகம் போன்ற சலுகைகளுக்காகவும் பலர் மதம் மாறினர். மதப்பற்றும் மொழிப்பற்றும் குன்றி எம்மவர் தமது தனித்துவத்தை இழக்கத் தொடங்கினர். அந்நிய மோகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் எமது மரபுவழி வந்த பண்பும் கலாசாரமும் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின. இதனைக்கண்ட நாவலர் மனம் பொறாது அந்நிய மத கலாசார ஊடுருவல்களைத் தடுக்கத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து முழுமூச்சாகப் பாடுபட்டார். நாவலருடன் நெருங்கிய ஈடுபாடு கொண்ட செந்திநாதையரும் அவரைப் போலவே பெரும் பணிகள் ஆற்றினார். சில துறைகளில் நாவலரையும் மிஞ்சிய தீவிரத்துடன் செயலாற்றினார் என்றும் எண்ணக்கூடியதாக இருக்கின்றது.

எதற்கும் அஞ்சாத நாவலர் பாதிரிமாரைக் கண்டித்து எழுதவும், கூட்டம் கூடவும் தவறவில்லை. அவர் விடுத்த கண்டனங்களுக்குச் செந்திநாதையர் உறுதுணையாக இருந்தாரென்பதும் சில இடங்களில் செந்திநாதையரைக் கொண்டே நாவலர் கண்டனம் விடுத்தார் என்பதும் அப்பொழுது வெளிவந்த '' இலங்கைநேசன் '', '' கத்தோலிக்கப் பாதுகாவலன் '' முதலிய பத்திரிகைகள் மூலம் அறியக்கிடக்கிறது. செந்திநாதையரின் கண்டனங்கள் கருத்தாழம்மிக்குத் தர்க்கரீதியாக அமைந்தவை. கிறிஸ்து மத கண்டனஞ் செய்த செந்திநாதையர் அம்மத நூல்களை ஊன்றிப் படித்திருந்தார். அதனால் அவரின் கண்டனங்களை எதிர்க்க முடியாத நிலையிலே அந்நிய மதத்தவர் பொய்யும் புரளியும் எழுதத் தொடங்கினர். '' சிவனுந்தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு '', '' வஜ்ரடங்கம் '' என்னும் கண்டன நூல்கள் இவரின் அந்நிய மத அறிவையும், சைவசமயத் தெளிவையும் தர்க்கத் திறமையையும், துணிவையும் விளக்கப் போதுமானவை. இவரின் கண்டன ஆற்றலை அறிந்த சைவ உலகம் '' கிறீஸ்துமத கானன குடாரி '' என்ற பட்டத்தை இவருக்கு அளித்தது.

செந்திநாதையரின் மனைவி சிவகாமியம்மையார் 1878-ல் காலமானார். அதன் பிறகு இந்தியாசென்று திருவனந்தபுரத்தில் சமஸ்கிருத காவியம், வியாகரணம், தருக்கம் முதலியன கற்றார். 1879-ல் நாவலர் சிவபதமடைய உளம் நொந்து வருந்திய செந்திநாதையர் பாடிய இரங்கற் பாக்கள் நாவலரில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உணர்த்துவன. 1880-ல் யாழ்ப்பாணம் திரும்பிய செந்திநாதையர் உபந்நியாசங்கள் செய்வதிலே தம் பெரும் பொழுதைக் கழிக்கலாயினார். 1882-ல் மீண்டும் இந்தியா சென்று ஆசிரியப் பணியேற்றவர், ஒரு வருடத்தின் பின் திருநெல்வேலியில் '' சுஜனமனோரஞ்சனி '' என்னும் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து கண்டனங்களும் நூல்களும் எழுதிப் பல பட்டங்கள் பெற்றுப் பத்துவருடகாலம் காசியில் வாழ்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டு கட்டுரைகள் எழுதியும் வருவாராயினர்.

மேலைப்புலோலியூர் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை ( 1871 - 1907) சைவம் தழைக்கப் பெரும்பணி புரிந்தவர். தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் ஆசிரியராக இருந்தவர். அவரின் மேடைப்பேச்சு, கேட்பவரை ஈர்த்துச் சிந்திக்க வைக்கும். பிறமதத்தவருக்குச் சிம்ம சொப்பனமாக நின்றவர். இவர் செந்திநாதையரிடம் பாடங் கேட்டு ஞான நூல்களைத் தெளிந்தவர். சென்னையில் நடந்த ஒரு மாபெருங் கூட்டத்தில் இவருக்கு '' மாயாவாத தும்சகோளரி '' என்ற பட்டத்தை வழங்கியவர் செந்திநாதையரே. செந்திநாதையரின் சேர்க்கையால் பலர் பல துறைகளில் பாண்டித்தியம் பெற்றும் பணிகள் ஆற்றியும் வாழ்ந்தனர்.

செந்திநாதையரின் காலத்தில் பொது மக்கள் சைவ சமய உண்மைகளை உணராமலும், தம் பழம்பெரும் பண்புகளையும் போற்றாமலும் வாழத் தலைப்பட்டனர். இதற்கு முக்கிய காரணம் அந்நிய மத ஊடுருவலும், அந்நிய கலாசாரத்தில் எம்மவர் மயங்கியதுமேயாகும். நாவலரின் அரும்பெரும் பணிகளால் இந்த நிலை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. ஆனால் படித்த சைவசமய அறிஞரிடையே மயக்கம் இருந்தது. பிரமம் என்றும் சிவம் என்றும் இது உயர்ந்தது, அது தாழ்ந்த தென்றும் வேதங்கள் கூறும் பிரமம் வேறு. தேவாரம் முதலிய சித்தாந்த நூல்கள் கூறும் சிவம் வேறு என்றும் பலதரப்பட்ட கருத்துக்கள் மலிந்திருந்தன. அறிஞருலகம் இந்தக் கருத்துக்கள் பற்றி வாதிட உண்மை தெரியாத ஒரு நிலை உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேதான் சித்தாந்தம் தெளிந்த செந்திநாதையர் ஆற்றிய தொண்டு எக்காலத்தும் போற்றப்படுவதாக அமைகிறது. பிரம்ம சூத்திரம் போன்ற நூல்கள் பற்றிய கருத்து வேறுபாடுகளைச் செந்திநாதையர் தர்க்கரீதியாக விளக்கி உண்மைப் பொருளைக் காண வழிவகுத்தார். வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களின் ஒருமைப்பாட்டை விளக்க 'தேவாரம் வேதசாரம்' என்ற நூலை அளித்தார். "நீலகண்டபாஷ்யத்"துக்கு உரையெழுதி பிரமசூத்திரம் பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளை நீக்கினார். 'சைவவேதாந்தம்' எழுதி வேதம் சார்ந்த நூல்களில் நிலவிய முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, சித்தாந்த மரபை நிலைநாட்டினார். இங்ஙனம் எத்தனையோ நூல்கள் எழுதிய செந்திநாதையர் சைவத்துக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த தொண்டுகள் அளவிட முடியாதவை.

எழுத்து, பேச்சு என்று மட்டும் நில்லாது, செயலிலும் தீவிரமாக இறங்கியவர் செந்திநாதையர். திருப்பரங்குன்றத்தில் "வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த வித்தியாசாலை" என்னும் பள்ளிக்கூடத்தையும் 'செந்திநாதசுவாமி யந்திரசாலை' என்ற அச்சகத்தையும் நிறுவிச் செயலாற்றியமை அவரின் பரந்துபட்ட பணிகளை விளக்குவதாக அமைகிறது.

## வைகாசி விசாகம்

விசாக நட்சத்திரத்தினால் பெருமை பெற்றது வைகாசி. இம்மாதத்தை வைசாகி என்றும் கூறுவர். இதனைச் சோதிநாள் என்றும் போற்றுவர். சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப் பெருமான் அவதாரம் செய்த திருநாள் இது. அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் என்ற பொருளில் வழங்குவது. என்றுமுள்ள, பிறப்பிறப்பற்ற ஒரு பொருள் உலகத்தை உய்விக்கும் பொருட்டு இறங்கி வருவதனையே அவதாரம் என்கிறோம். தேவர்களின் வேண்டுதலை ஏற்றுச் சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகனைத் தோற்றுவித்த சம்பவத்தையே கந்தபுராணம் காட்டுகிறது.

"காலமாய்க் கால மின்றிக் கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோல மின்றி குணங்களாய்க் குணங்க ளின்றி
ஞாலமாய் ஞால மின்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்" என்பர் கச்சியப்பர்.

தக்கன் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். இறைவன் அருளால் வரங்கள் பல பெற்றான். பின்பு வரங்கொடுத்த இறைவனையே மறந்து யாகத்தைச் செய்தமையால் பெருந் தண்டனை யடைந்தான். சிந்திக்கும் ஆற்றல் இல்லாத ஆட்டின் தலையொன்று தக்கனுக்குப் பொருத்தப்பட்டது. நன்றி மறந்தமையால் இந்நிலை கிடைத்தது. ஆனால் தேவர்களும் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தக்கனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் கலந்து கொண்டமையால் பல துன்பங்கள் அடைந்தார்கள். இவர்கள் தெரிந்து கொண்டே இத்தவற்றினைச் செய்தமையால் இவர்களுக்குத் தண்டனையை அசுரர்களிடமிருந்து இறைவன் ஏற்படுத்தினான். சூரபன்மன் ஆகியோரால் துன்பப்பட்ட தேவர்கள் துன்பந் தொலையும் காலம் அண்மியதும் இறைவனிடமே சென்று முறையிட்டு இரந்து நின்றனர்.

அத்தொடர்பில் எம்பெருமான் முருகன் உதித்த நாள் இதுவேயாகும். இந்த நாளில் முருகப் பெருமானை வழிபாடு செய்து அவன் நாமத்தை ஆயிரம்முறை ஜெபித்து ஆனந்தமடைவது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும். முருகப் பெருமானின் அவதாரத்தால் மகிழ்ந்த தேவர்கள் விசாகனைப் போற்றிய திறத்தை நாமும் இவ் விசாக தினத்தில் நினைவு கூருவோம்.

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம நங்கை உமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம நற்பரம தாம்
எந்தைநம என்றும்இளை யோய்நம குமாரநம என்று தொழுதார்"

அருணகிரிநாதரும், எம்பெருமான் முருகனை வழிபடுவோர்க்கு ஒரு தாழ்வுமில்லையே, என்று அழகாகப் பாடியுள்ளார். நாமும் பாடி அமைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவபிரான் சம்பந்தர் உறவு

## தந்தை தனயன் உறவுபோல்வது

திருமுறைப் பாராயணச் செல்வர் சிவ. சண்முகவடிவேல்

### தோற்றுவாய்

உலகில் செய்யத்தக்கவை அறங்கள். அறங்களுக்குள்ளே தலையாயது இல்லறம். ஆன்றோர் இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்பர். இல்லறத்திலும் மங்கல மானது நன்மக்கட்பேறு. அந்தப்பேறும் தவப்பேற்றால் வந்து தங்குமே என்றால் அது தன்னையும் தன் கிளையையும் உலகத்தையும் வாழ்விக்கும்.

அந்த வாழ்விப்பைக் குறிக்கோளாகக் கொண்டே சிவபாதவிருதயர் இல்லற தருமத்தை மேற்கொண்டார். அவருக்கு வாழ்க்கைத் துணையாக வந்து வாய்த்தார் பகவதியார். தலைவனும் தலைவியுமான காதலர்கள் இருவர் கருத்து ஒருமித்தார் கள். காதலர் இருவர் கருத்து ஒருமித் தல் என்றால் கணவனும் மனைவியும் ஒரு கருத்தை முன்வைத்து இருவரும் அதன் வழி செல்லுவது அல்ல. கணவன் என்ன குறிக்கோளைக் கருத்திற் கொண் டாரோ அதன் விளைவிற்கு மனைவியும் தன்னை அர்ப்பணித்தல். சிவபாதவிருதயர் பகவதியார்-இவர்களின் கருத்து ஒருமிப்பை அவதானித்துக் குடும்ப வாழ்க்கையை நெறிப்படுத்தல் – தமிழ் சைவ – கணவன் மனைவி குடும்ப வாழ்க்கைக்கு என்றும் நிலையான கடைப்பிடியாதல் வேண்டும்.

அந்நாளில் மேதினியில் சமண பௌத்தப் பொய் மேலோங்கி இருந்தது. வேதநெறி அருகியது. சைவத்துறை விளங்கவில்லை. பூதிசாதன விளக்கம் போற்றப்படவில்லை. அது கண்டார் சிவபாதவிருதயர்; இட ருழந்தார்.

அதனாலே கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்பத்தில் மகப்பெறுவான் விரும் பினார். பரசமயம் நிராகரித்து நீருக்கும் புன்மணிப்பூண் காதலனைப் பெறப் 'போற்றும் தவம் புரிந்தார்.'

கணவனாருடைய கருத்தைப் பக வதியார் அறிந்தாரோ அறியவில்லையோ – சிவபாதவிருதயரும் வாய்விட்டுச் சொன் னாரே சொல்லவில்லையோ – கணவருடைய குறிக்கோளுக்குத் தம்மை அர்ப்பணம் செய்தவராதலாலே – திருத்தோணிபுரத்து வீற்றிருந்தார் சேவடிக்கீழ் சிவபாதவிருதயர் சென்று வழிபட்ட பின்பு, 'கணவர் எதை விரும்புகிறாரோ அக்கருத்தையே முடித்து வைக்க வேண்டும்' எனப் பகவதியார் பரவிவந்தார்.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆத ரவுபட்ட அந்த இன்பத்தில் 'பிள்ளையார்' திருவவதாரஞ் செய்தார்.

இல்லற தருமத்தில் ஈடுபட்டவர்கள் பிள்ளைகளைப் பெறுவதில் ஒன்றும் புதுமை இல்லை. சிவபாதவிருதயர் பகவதியார் இல்வாழ்க்கையில் அது போற்றற்குரியதாக அமைகிறது. ஏனென்றால் அவர்கள் தவத் தாலே பெற்றெடுத்தார்கள். அந்த உண் மையை உறுதிப்படுத்தவே எல்லாத் தாய் மாரையும் போலவே பகவதியார் பிரசவித் தாலும் – அதைப் பிள்ளையார் 'திருவ வதாரஞ் செய்தார்' எனப் பெரியோர் போற்றுவர்.

சாமானிய சிசு உற்பத்திநிலைக்கு அப் பாற்பட்டவர் பிள்ளையார் என்பதனைச் சேக்கிழார் 'பண்டுதிரு வடிமறவாப் பான்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர் தமைப்பரமர் மண்டுதவ மறைக்குலத் தோர் வழிபாட்டின் அளித்தருள' , 'காதலி யார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும் பெரும்பே றுலகுய்ய' உளதாயிற்று என்று சிவபெருமானுடைய திருவருட் செயலே பிள்ளையாரின் தோற்றம் என்று ஆங் காங்கு உணர்வுபெற உரைத்தருள்வர்.

இனித் தந்தைக்குத் தனயன் உறவைப் பார்ப்போம்.

சிவபாதவிருதயர் மணிவாவிபுக்கு உள்ளி ழிந்து 'அகமருடம்' படிய நீரில் மூழ்கிய போது தந்தையாரைக் காணாமல் சிவ ஞானசம்பந்தர் நிறைபுனல் வாவிக்கரை யில் நின்றும் திருத்தோணிச் சிகரம் பார்த்து அல்லவா 'அம்மே அப்பா' என்று அழைத்துப் பொருமி அழுதருளினார்.

அழுகையைத் தீர்த்தருள - கன்றின் கனைப்புக் கேட்ட தாய்ப்பசுவைப் போல எழுந்து வந்து எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருள உண்ணடிசில் என அல்லவா ஊட்டியருளுவித்தனர். இது அவ்வுறவின் ஆரம்பம்.

ஆளுடையபிள்ளையார் தமக்கும் பிரம புரப்பெருமானுக்கும் இடையே உள்ள உறவு, தந்தை மைந்தர் உறவு என்ற உண்மை வெளிப்படத் திருப்பதிகங்களில் போற்றிப் புகழ்ந்து பாடியதும் உள.

அ) 'போதையார் பொற்கிண்ணத் தடி சில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்'- என்றும்,

ஆ) '.. துருத்தியாய், திருந்தடி மறக்குமா றிலாத என்னை மையல் செய் திம் மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினாய் ...' என்றும் - இவை போல்வன பிறவுமாக வருவன எல் லாம் 'அந்த உறவு முறையை' மெய்ப்பிப்பன.

திருக்கோலக்காத் திருத்தலத்தில் கைய தனால் ஒற்றறுத்துப் பாடுவதனால் உண்டாகும் வருத்தம் தீர்க்க-

செம்பொற்றாளம் மறைச்சிறுவர் கைத் தலத்து வந்திருப்ப ஐயரவர் அருள் செய்தார்.

திருவரத்துறைநோக்கி நடையிற் சென்ற சம்பந்தர் பாததாமரை வைப்பய வருந்தும் நோவு மாற்ற-

ஏறுதற்குச் சிவிகை, இடக்குடை, கூறி ஊதக் குலவு பொற்சின்னங்கள் நீறு வந்த நிமலர் அருளுவார்.

திருவாவடுதுறையில் ஞானசம்பந்தரின் தந்தையார் நிதிக்குறை நீக்க - உலவாக் கிழி உதவினார்.

மகனுக்கொரு தொண்டர் துணை இல்லாக் குறை போக்க - வாக்கின் மன்ன வரைச் சீர்காழியில் வந்தணைய அருள் செய்தார். இங்ஙனம் சிவபெருமான் தானுடனாய் நின்று சம்பந்தர்க்கருளிய சிறப்பனைத்தும் தந்தை - மகன் உறவின் வெளிப்பாடுகளாம்.

---

## அருள் விருந்து

தூயஉள்ளத்தில் வெறுப்புத்தன்மை வேர்விடுவதில்லை.
துன்பங்கள் வருவதால் மனிதன் சீர்திருத்தமடைகின்றான்.
எண்ணத்துக்குத் தக்கதாக வாழ்வு அமைகிறது
பொறாமை மனிதமேன்மைகளைத் தேய்த்து விடுகின்றது.
நெறியான வாழ்வில் நேர்மையனைத்தும் உண்டு.
பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை.

— ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கூட்டச் சிறப்பு

**சைவப்புலவர், பண்டிதர் ச. சச்சிதானந்தசிவம்**

பூதநாயகரும் புற்றிடங் கொண்ட பெருமானும் ஆதிதேவருமாகிய தியாகேசப் பெருமான் வீற்றிருக்கும் திருவாரூர்த் திருக்கோயிலைப் பூங்கோயில் என்று யாவரும் போற்றுவார்கள். அத்திருக்கோயில் முற்றத்தைச் சூழ்ந்திருக்கும் பழமை வாய்ந்த மதில்களின் திருவாயிலின் முன்னாகத் தேவாசிரியன் என்னும் திருமண்டபம் திகழ்கின்றது. அத்திருக்காவணத்தில் பூமியைப் படைக்கும் பிரமதேவனும் பூமகளைத் தன் மார்பகத்தில் வைத்திருக்கும் திருமாலும் ஏனைய விண்ணுலகத் தேவர்களும் எப்பொழுதும் நீங்காமல் நிறைந்து இருப்பார்கள். மண்ணகத்தே வாழும் சிவனடியார்களும் அம்மண்டபத்தில் வந்து கூடுவார்கள். அத்தொண்டர்களின் திருமேனியில் பரவப் பூசியிருக்கும் துன்பம் தீர்க்கும் திருநீற்றின் ஒளியாலும் அத்தூயவர் உள்ளத்தில் நிறைந்துள்ள தூய்மையாலும் அவர்கள் ஓதும், நாதன் நாமமாகிய ஐந்தெழுத்தின் பேரோசையாலும் தேவாசிரிய மண்டபம் திருப்பாற்கடலைப் போலத் திகழ்கின்றது.

அகில உலக காரணராகவும் அகிலாண்ட நாயகராகவும் விளங்குகின்ற ஆதிப் பரமனின் திருவடிகளை அன்போடு பணிபவர்தாம் அகிலலோகங்களையும் ஆளுதற்கு உரியவர் என்று அகில உலகத்திலுள்ளவர்களும் அங்கு வந்து சேருவதால் அந்த மண்டபத்தில் அகில உலகமும் அடங்கியிருப்பது போலவும் அமைந்திருக்கும்.

அத்திருமண்டபத்தில் நிறைந்து குழுமியிருக்கும் சிவனடியார்கள் சாமானியரல்லர். பொன்னார் மேனிப் பெருமானால் முன்னாளில் விரும்பி ஆட்கொள்ளப்பட்டவர்கள். சிவன் என்ற சிந்தனையன்றி வேறொன்றும் சிந்தியாச் சிந்தை உடையவர்கள். சித்தத்தைச் சிவன்பாலாக்கிய சிவனருட் செல்வர்கள். அன்புவடிவங் கொண்டவர்கள். கண்ணுதற் பெருமானுக்குக் கைத்திருத்தொண்டு செய்யும் கடப்பாடுடையரும், ஏனைய முறையிற் தொண்டு செய்தோருமாகச் சிவனடியார் கூட்டத்தினர் எண்ணிக்கையற்றோராய் அம்மண்டபத்தில் நிறைந்திருப்பார்கள். மாசு மறுவற்ற மணி போல் ஒளி வீசும் மேனியின் மீது பூசும் திருநீறு போலவே உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராய் விளங்கும் புனிதர்கள். அச்சிவதொண்டர்கள் தங்கள் தூய ஒளிப் பிரபையினால் எத்திசையும் பிரகாசிக்கச் செய்வர். பேசவொண்ணாத பெருமை பெற்றவர்கள். ஐந்து பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும் தத்தம் நிலையில் கலங்கினாலும் அவர்கள் மாதொருபாகனின் மலரடிகளை மறவாத நிலையினர். குற்றமற்ற குணமலை போன்றவர்கள். ஆசையை அறவே அகற்றியவர்கள். வறுமையும் பொருட் செல்வமும் வெறுத்து அழித்த அருந்தவச் செல்வர்கள். செங்கல் ஓட்டினையும் செம்பொன்னையும் ஒன்றாகவே கருதும் மனப்பக்குவ முடையவர்கள். இறைவனை மனத்திற் கொண்டு பக்தி மேலீட்டினால் அவரைக் கும்பிடுதலொன்றையேயன்றி முத்தியையும் விரும்பாத சித்த சுத்தியுடைய வெற்றியாளர்கள். அவர்கள் அணியும் ஆரம் உருத்திராக்க மணியாரம். உடுத்தும் ஆடை கந்தை. அவர்கள் பணி ஈசன் திருப்பணியேயன்றி வேறு எதுவும் இல்லாதவர்கள். ஈரம் குளிர்ந்த அன்பினர். எந்த விதமான குறைவும் இல்லாதவர்கள்.

இத்தகைய சிவநேசவீரர்களின் தன்மையை என்னால் அளவிட்டு விளம்ப முடியுமா? இவர்கள் வேண்டும் விதமான வேடங்கள் எடுத்து உலகைக் காப்பவர்கள். தாண்டவப் பெருமானின் தனிப்பெருந் தொண்டர்கள், இத்தகையவர்களின் அருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகளில் எதையறிந்து நான் எடுத்துப் புகழ்வேன்! சிறப்புடைய இச்சிவனடியார் களின் திருக்கூட்டத்தைப் பற்றி ஆலால சுந்தரர் பாடியருளினார். அத்திருப்பாடல் களே திருத்தொண்டத் தொகையாகும்.

இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்தமில் புகழாலால சுந்தரன்
சுந்தரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்துபாடிய வண்ணமுரை செய்வாம்.
– தடுத்தாட்கொண்ட புராணம்

கங்கையையும் பிறைமதியையும் பாம் பையும், கொன்றை மலரையும் முடிமேல் வைத்த அருட்கண்ணராகிய சிவபெருமான், அடிமையோலை காட்டி ஆண்டவர் ஆலாலசுந்தரர். அச்சுந்தரர் அவதரித்த நாடு திருமுனைப்பாடி நாடு. பெருவளம் நிறைந்த திருமுனைப்பாடி நாட்டில் அருமறைச் சைவமோங்க அருளினாலவ தரித்த வாய்மை குன்றாத் திருமறையவர் கள் நிறைந்து வாழும் பெருமை உடையது திருநாவலூர். மாதொருபங்கருக்கு வழி வழியடிமை செய்யும் வேதியர் குலத் தவராகிய சடையனாருக்கும் இசைஞானி யாருக்கும் செய்தவப்பேறாக, தீமையகன்று உலகமுய்யச் சுந்தரர் திருவவதாரம் செய்தார். தம்பிரான் அருளினால் தோற் றிய அக்குழந்தைக்கு நம்பியாரூரர் என்று பெற்றோர் நாமம் சூட்டி நனிமகிழ்ந்தனர். கொஞ்சி விளையாடும் அக்குழந்தைப் பருவத்தில் அழகினுக்கு அழகு செய்வார் போல ஐம்படை, சதங்கை, அணிமணிச் சுட்டி, செம்பொன்னரை நாண் என்பன அணிந்து பெற்றோர் மகிழத் தெருவில் பொற்றேருருட்டி நம்பி விளையாடுவாராயி னார்.

ஒருநாள் நரசிங்கமுனையார் என்னும் நாடாளுமன்னர் நம்பியாரூரரின் ஆட லைக் கண்டார். அக்குழந்தையைப் பெற வேண்டுமென ஆசைகொண்டு பெற்றோ ரிடம் சென்று நெருங்கிய நண்புரிமை யோடு வேண்டிப் பெற்று அரசிளங்குமார னுக்கு ஒப்ப மகவுரிமையாக்கி வளர்த்து வந்தார். அரசமனையில் வளர்ந்தாலும், நம்பியாரூரர் அந்தணர் மரபிற்குரிய உப நயனப் பெருமணத்தில் அணியும் முப்புரி நூலணிந்து பலகலையும் கற்றுத் திருமலி சிறப்பினோங்கித் திருமணப் பருவம் எய்தி னார்.

அப்பொழுது தந்தையார் சடையனார் தமது திருமகனுக்குச் சைவ அந்தணர் குலத்து, தங்கள் பெருமரபிற்கேற்பப் புத்தூர் சடங்கவிசிவாசாரியாரின் திருமகளை மணத் திறஞ் செப்பி அந்தண முதியவர்களை அவர் பால் விடுத்தார். நலமிகு முதியோர் சொல்லால் சடங்கவிசிவாசாரியாரும் மண இசைவு கொண்டமையை மகிழ்வொடு கூறினர். புகழனாரும், மாதினியாரும் நம் பியைப் பெற்ற நாளிலும் பெரிதுவந்தனர். மணவினையுகந்து மங்கலம் பொலியச் செய்த திருமண நாளோலையைச் சடங்கவி சிவாசாரியாருக்கு அனுப்பிவைத்தார்கள். மணவினைக்கமைந்த வெல்லாம் இரு திறத்தாரும் எழில்பெற அமைத்தனர். மணமலர்ப்பந்தரும் மாண்புற அமைந்தது. திருமணத் திருநாளின் முன்னாள் மறை விதிப்படி மங்கல முரசமியம்ப மண மகனுக்குப் பொன்னாண் காப்புச் சேர்த் தார்கள். வேதவிதிமுறை வழாது திருமணத் துறைக்கடன்கள் செய்யும் மந்திரவொலியும் மங்கல வாத்திய ஒலியும் சேர்ந்து அன் றிரவு திருமறை மூதூர் எங்கும் ஆர்த்தது. நம்பியாரூரரின் சுந்தரத் திருமணக் கோலம் காணக் காமுற்றான் போலக் கதிரவன் உதயம் செய்தான். மணமகனுக்குக் கணிதநூற்புலவர் சொன்ன வேளைவந்து சேருமுன்னர் விதிப்படி மணக்கோலம் புனைவதற்குத் திருமஞ்சனச்சாலையில் புகுந்தனர். திருமஞ்சன மாட்டினர். மன் னவர்திருவும் தங்கள் சைவ வைதிகத் திரு வும் சேர்ந்து விளங்க நம்பியாரூரருக்கு நன்மணக்கோலம் புனைந்தார்கள். நம்பி நாயகன் தன்னடி பணிந்து மனதுட்கொண்டு நலம்வரும் நீறணிந்து பொன்னணி மணி யொலிக்கும் புரவி மேலமர்ந்து சென்றார். மங்கல கீத நாதமும் மறையவர் கூட்டமும் தங்கிய மலையனதோண் மைந்தரும் குங் கும முலையினாரும் சூழ்ந்து குழுமிட குல மறையோர்கள் வாழும் புத்தூர் வந்தனர். அப்பொழுது அந்தண மடந்தையர் தமது கைகளில் நிறைகுடம், தூபதீபம், நென் முளைப்பாலிகை ஏந்தியவராயும் நறைமலர் அறுகு, வெள்நிற நெற்பொரி என்பன வீசி யவராயும் நறுமணக் கலவைச் சாந்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னீரிற் கலந்து வீதி எங்கும் தெளித்து வருபவராயும் சுந்தரர் திருமணத்தை எதிர் கொள்ள வந்தனர்.

திருமணக் கோலத்தில் தோன்றிப் பெரு மணக் காட்சியனாக விளங்கும் சுந்தரரின் மோகன சுந்தரத்தை மறையவர் மடவார் கண்டு மனமிக மகிழ்ந்தனர். கண்கள் எண்ணிலாதன இக் காளையின் பேரழகைக் காண வேண்டுமேயென்பர். பெண்களில் பெருந்தவம் செய்தவள் சடங்கவியின் திரு மகள் தானோ என்பர். மண்ணுலகம் கண்டு மகிழ வந்த இத்திருமணம் கண்டு வாழ்ந் தோம் என்பர். பொன்னொளி தவழும் மேனிப் புண்ணிய மூர்த்தி இவனோ என்பர். பண்ணிசை நிறைந்த கீதம் பாடுவாராடு வாராயினர். திருமணக் கோலத்தில் வந்த எங்கள் திருநாவலூரன் திருமணப் பந்தர் முன் சென்று தாம் அமர்ந்து வந்த குதிரை யினின்றும் இறங்கினார். பெருமழை முகில் ஒலிபோல் வெண்சங்குகள் எங்கும் ஒலித்தன. மறைவிதிப்படி மணத்தொழில் தொடங்கும் அம்மணிமண்டபத்தில் மணியொளி வீசும் ஆசனத்தில் மணவாளத் திருக்கோலத்தோடு நம்பியாரூரர் மறைவல்லோர் குழுமிய பேரவையில் அமர்ந்திருந்தார்.

---

## விநாயகருக்கு
## விகட சக்கர விநாயகர் என்ற பெயர் உண்டானது ஏன்?

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். (கந்தபுராணம்)

சிவபெருமானை மதியாது தக்கன் யாகம் செய்தான். அதை, வீரபத்திரக் கடவுளை ஏவி அழிப்பித்தார். வீரபத்திரர் தேவர்களுக்கெல்லாம் நல்ல தண்டனை கொடுத்தார். விஷ்ணுமூர்த்தி வீரபத்திரர்மேல், தமது சக்கராயுதத்தை ஏவினார். அதை, வீரபத்திரர் அணிந்திருந்த ஒரு வெண்தலையோடு கௌவிக் கொண்டது. சக்கராயுதத்தைப் பெற, விஷ்ணுமூர்த்திக்காக, அவருடைய சேனாதிபதி விடுவசேனன், கோணங்கி வேஷமாய் விகடக் கூத்து ஆடினான். அதைக்கண்டு யாவரும் நகைக்க, கௌவியிருந்த வெண்டலை யும் நகைத்தது. அப்போது சக்கரம் விழுந்து விட்டது.

விழுந்த அந்தச் சக்கரத்தை, ஒருவருமே அறியாதபடி விநாயகர் கவர்ந்து கொண் டார். இச் செய்கையை விடுவசேனன் மாத்திரம் அறிந்திருந்தான். அவர் முன்னும் விகடமாய் நடித்தான். அதைக்கண்டு மகிழ்ந்து சக்கரத்தைக் கொடுத்து விட்டார்.

(உட்பொருள் – அன்போடு விகடமாய் நடித்தவனுக்கு அருள் செய்த விநாயகரை நாமும் அன்பு கொண்டு கசிந்து கூத்தாடினால், அவரிடம் வேண்டியன பெறலாம்.)

---

## சிந்தனைச் சுடர்

- உடல் ஊனமுற்றோர் காலடியில் இறைவனைக் காண்கின்றேன்
- கண்பார்வையற்றோரின் இமைகளில் இறைவனது நாட்டியம் காண்கிறேன்
- செவிடர்களின் காதுகளில் காதணிகளைப் போன்று இறைவன் பிரகாசிப்பதைக் காண்கிறேன்
- ஊமையின் குரலில் இறைவது இசையை ரசிக்கிறேன்
- தொழுநோயாளியின் வெண்மையான பாகங்களில் இறைவனது பால்போல் வெள்ளை மனதைப் புரிகின்றேன்
- மனவளர்ச்சி குன்றியோரின் மனநிலையில் இறைவனிடம் மன்றாடுகிறேன்

ஆக்கம் – கிரார்மராஜ்யம் தொகுப்பு – க. கனகராசா

4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம்

# ஈசனவ னெவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

பண்டிதர் மு. கந்தையா

ஒருவரை யொருவர் காண்கையில் மார்பினெதிரே கைகூப்பி வணங்கவேண்டும் என்பது ஆசாரவிதி. மனிதனை மனிதன் வணங்குவதா என்றால் அப்படியன்று. எதிர்ப்படுபவர் பாலிருக்குஞ் சிவனுக்கே அவ்வணக்கம் எனப்படும். இது ஒரு பொது நிலை. பெற்றோர், உபாத்தியாயர், தீக்ஷாகுரு, ஞானகுரு இவர்கள் விஷயத்தில் அதே காரணத்துடனே ஒரு சிறப்பு நிலையாக இது உண்டு. இவையெல்லாம் ஒட்டுமொத்தமாகச் சீவனிடத்திற் சிவனிருக்கும் உண்மைக்கு ஞாபகங்கள்.

ஆனால் இவ்வுண்மை நம் கண்ணாகிய புலனுக்கு எதிர்ப்படுவதாயுமில்லை. கண்ணுக்கும் புலனுக்கும் தகுதியற்ற நுண்பொருள் சிலவற்றைக் காண்டற்குக் கண்ணுக்குதவும் சாதனங்களான பருநோக்கி தொலைநோக்கிகளுக்கு விஷயமாகுஞ் சாத்தியமுமில்லை.

புறவுடற் காட்சிகளைக் கண்ணாற் காணலாம். உள்ளுடற் காட்சிகளை உடற்கூற்று வைத்திய சாதனக் கருவிகளின் உதவியாற் காணலாம். உடல்கொண்ட உயிருக்கு இந்தப் புறவுடல் உள்ளுடல் இரண்டுஞ் சேர்ந்து ஒரு சரீரம்; அது அன்ன சரீரம்; அதற்குள்ளே பிராணசரீரம்; அதற்குள்ளே மனசரீரம்; என்று உள்ளுக்குள்ளாஞ் சரீரங்களுமுண்டு. எல்லாச் சரீரங்களிலும் உயிர்க்குச் சீவிப்பு நிகழ்ந்துகொண்டிருக்கும். ஆனால் அன்னசரீரத்துக்கு அப்பாற்பட்டவை. புறக்கருவி சாதனங்களுக்கு விஷயமாவதில்லை. ஆரேனும் ஓரளவு உள்ளுணர்வுக் காட்சி வெளிவந்தவர்கள் மனஉடற்செய்திகளை ஒருவாறு காணலாம். அதற்கப்பாற்பட்டவை மகாஞானிகளுக்கன்றி மற்றையோருக்குத் தரிசனமாவதில்லை.

இம் மனவுடல் சம்பந்தப்பட்ட மட்டில் உயிர்க்கு நிகழுஞ் சீவிப்பு அறிதல்மயமான சீவிப்பு. அதன் இயல்புகளைத் தம் விவேகத்தாற் காணத்தக்கவர்கள் மனோதத்துவ நிபுணர்களென்றிருக்கிறார்கள். அவர்கள் மதிப்பீட்டில் இந்த அறிதல் விஷயம் சம்பந்தமாக அறிநிலை, அறிதற்கு முன்மை நிலை, அறியாநிலை என மூன்றாகக் காட்டப்படுகிறது. அவர்கள் மொழியில் அவை முறையே 'கொன்ஷஸ்', 'ப்றிகொன்ஷஸ்', 'அன்கொன்ஷஸ்' எனப்படுகிறது. சைவ சித்தாந்த தத்துவப் பெயரமைவில் இம் மூன்றும் முறையே, "புத்தி", "மனம்" "சித்தம்" எனப்படலாம். இவற்றுள் புத்தியும் மனமும் தொடர்புறுவது அவ்வப்போது நேரிற்பெறும் அறிவு விளக்கத்துக்கு மட்டுமே. மூன்றாவதாகிய சித்தம் அப்படியல்ல, அது ஒரு பெரிய சரக்கறை. அதாவது ஆன்மாவின் முன்னைய அநுபவப்பதிவுகளைப் படைபடையாகக் கொண்டு பெரிய பதிவாளர் காரியாலயம் மாதிரி இருக்கும் பழைய சேமிப்பறை சித்தமாகும். வாழ்வியக்கத்துக்கு வேண்டும் உணவுமூலங்கள் அனைத்துக்கும் அதுவே இடமென்பர். வாழ்விலே உயிர்க்கு ஏற்படும் இச்சை உணர்வுகள் எல்லாம் அறியாநிலையிற் கிடந்துவெளிப்படுவது சித்தம் மூலம்தான் என்பர் மனோதத்துவ நிபுணர்கள். இந்த இச்சை உணர்வெல்லாம் இதற்கு விளைவதேன் எனில் இந்த உயிர் தன் குறைபாடுகள் தவிர்ந்து காலகதியிற் குறைவிலா நிறைவு பெறும்படியாக ஊக்கும் ஒரு இலட்சியத்தை முன்னிட்டே என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிற் பிரசித்திபெற்ற C. G. யங் என்பவர் உயிரின் இந்த இச்சைகளுக் கெல்லாம் மூல இச்சையாய்ச் சித்தத்திலிருந்தெழுவது தெய்வ இச்சையென்றும், அது தன் பருமட்ட நிலையிற் பாலியல் இச்சையை முன்வைத்தெழுமென்றும் காட்டுவர். எவ்வுயிர்க்கும் பாலியலிச்சை பொதுவானதாயும் பிரதானமானதாயும் இருத்தல் அவ்வவ்வுயிரின் முடிந்த தேவையாகிய பூரணத்துவப் பேற்றுக்கு உதவும் தெய்வீக இச்சையின் சார்பினதாயிருக்கும் பண்பு பற்றியேயாம் என்றும் விளக்குவர். இந்துக்களாகிய நம்மவரிடையில் பாலியல் தெய்வீகப் புனித விஷயமாகவே மதிக்கப்படும். அத்தொடர்பை நெறிப்படுத்துவதாய திருமண வைபவப் பண்பானது ஆன்ம பூரணப் பேற்றுக்குதவுஞ் சிவனையும் சக்தியையும் சாட்சியாகவும் இலட்சியமாகவுங் கொண்டு நிகழ்த்தப்படுதலிலிருந்து இது புலனாகும். சைவத்தில் இப்பூரணப் பேறளிக்குஞ் சிவம், சக்தி சமேத சிவமாக அமைய வந்ததன் தாற்பரியமும் இதிற் பிரதிபலித்தல் காணலாம். இது விரிக்கிற் பெருகும்.

இங்ஙனம் உயிர் தன் பூரணத்துவம் பெறுதல் காரணமாக மேற்கொள்ளும் வாழ்க்கையின் ஒவ்வோரம்சத்திலும், தெய்வத்தின் செல்வாக்குண்மை அறிந்தனுசரிக்கப்படும் வகையால் வாழ்க்கையின் ஒவ்வோர் திருப்பத்திலும் சாமான்ய வாழ்க்கைப் பலன்கள் கூடச் சீர்மைபெறும் என்பதை இவ்வாசிரியர் பரீட்சார்த்த முறையாக மேற்கொண்டு சித்திபெற்ற ஒரு செய்தி இங்கு கருதத்தகும்.

இவர் மனோதத்துவ நிபுணராதலுடன் சிறந்த வைத்திய நிபுணருமாவர். தம்மிடம் சிகிச்சைக்கு வருவோரில், விசேடமாக நடுத்தரவயது கழிந்தோரிற் பலருக்கு மருத்துவரீதியான சிகிச்சைகள் பலனளிப்பதில்லையாம். தம் மனோதத்துவப் பரீட்சை விதிகளைப் பிரயோகித்தவகையில் அவர்கள் நோய்கள் உடலுறுப்பிசைவீனம் அல்லாத வேறு காரணத்தால் நேர்ந்திருக்கக் கண்டு மாற்று மருந்தாக அவர்களுக்குத் தெய்வசிந்தனையூட்ட முன்வந்துள்ளார். அதற்கிசைந்தமைந் தொழுகித் தெய்வ நம்பிக்கையுற்றோரில் நோய் நீங்கப்பெறாதார் ஒருவருமே இல்லை. அங்ஙனம் இசைந்தொழுகி நம்பிக்கையுறாதோரில் நோய்நீக்கம் பெற்றாரும் ஒருவருமில்லை என்கின்றது, அவருடைய அறிக்கை. இத்தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், அவர்கள் தமது பாரம்பரியத்துக்குரிய தெய்வ உணர்வு நிலைகளைப் பேணி அனுசரிக்கத் தவறியமையாலேயே நோய்வாய்ப்பட்டனர், என்கின்றார்.

நம் சமூகத்திலும் ஒரு வைத்தியத்துக்குங் கட்டுப்படாமற் கர்மநோயாளியென்று கைவிடப்பட்டோருளர். அவருட்பலர் செல்வச்சந்நிதி போலுமிடங்களைத் தஞ்சமடைந்து பழிகிடந்து நோய்நீக்கம் பெற்றோருமுளர். இவையெல்லாம் ஒரேயோருண்மையையே எடுத்துணர்த்துகின்றன.

ஒவ்வொருவருக்கும் அவரவர் தெய்வம் பலன் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறது. அது அவரவரிடத்தில் அவரவர் சித்தம் இடமாக சித்தம் எழுப்பும் இச்சைகளுக்கு மூல இச்சையாகத் தானே தன்னியல்பாக இருந்துகொண்டிருக்கிறது. என்பதே அதுவாகும்.

தலையங்கமான திருவாசகத் திருச்சாழல் வாசகம் இதனையே தெரிவிப்பதாகும். சைவத் திருமுறைகளூடே உலாவுகையில் இவ்வுண்மைக்கு இதுபோல்வன பலவற்றைச் சந்தித்தல் கூடும்.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக் கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினாலாண்டு கொண்ட திருத்துருத்திமேயானை — திருவாசகம்.

"என்னுளமே ஒன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே" — அப்பர் தேவாரம்.

ஏகம்பத்தில் உறைவானை ஒருவருமிங்கறியாவண்ணம் என்னுள்ளத்துள்ளே ஒளித்து வைத்த சிறையானைத் திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே" — திருத்தாண்டகம்.

★ □ □ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சித்தாந்த இரத்தினம்' கந்தையா கணேசலிங்கம்

செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான்.



செந்திநாதையரின் வரலாற்றுப் புகழ் நிலை பெற உழைத்த குப்பிழான் வாசிகள் இருவர். ஐயரின் சொந்த இடமாகிய சொக்க வளவுப் பிள்ளையார் முன்றிலில் சைவ மகா சபை மூலம் செந்திநாதையர் சிலை நிறுவிய, சிவமுத்துலிங்கம் ஒருவர். 1978-இற் செந்திநாதையர் ஞாபகார்த்த சபை நிறுவி ஞாபகமலர் வெளியீட்டதுடன் செந்திநாதையர் மணிமண்டப ஆக்கத்துக்கான ஆரம்ப முயற்சிகளிலும் ஆர்வங் கொண்டுழைத்த மற்றவர் திரு. கந்தையா கணேசலிங்கம்.

இந்நாளில் தமிழக வாசியாயிருக்கும் கணேசலிங்கம் சில வருடங்களாகத் திருவாவடுதுறை ஆதீனம் நடத்திய சைவசித்தாந்த வகுப்புகளிற் கற்றுத்தேறி ஆதீனத்தால் 'சிந்தாந்த இரத்தினம்' பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட செய்தி, அவர் ஐயரின் அன்பரும் அபிமானியுமாயிருந்ததன் நற்பேறாகக் கருதப்படும். ஐயரின் ஆசி அவருள் நின்றியற்றுதல், கடந்த புரட்டாசி மாதம் வெளிவந்த 'சித்தாந்தம்' சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள அவர் கட்டுரையின் சீர்மையாற் புலப்படும்.

திரு. கணேசலிங்கம் விஞ்ஞானபாட மாணவனாயிருந்தபோதும் பொறியியற் பட்டதாரியாய்த் தொழில் புரிந்திருந்த போதும்கூட, சைவத் தமிழறிவு வேட்கை மிக்கவராயும், கவிதை கட்டுரை ஆக்கங்களில் வல்லவராயும் விளங்கிய ஒருவர். அவர்க்கிருந்த இவ்வாற்றல்களின் பிரதிபலிப்பை அவர் வெளியிட்ட செந்திநாதையர் மலரிற் காணலாம். சென்ற வருடம் இந்தியாவில் நடைபெற்ற திருக்குறட் கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெற்றமையையும் அது காட்டும்.

சைவப் பெரியார் திரு. கா. நல்லையா தலைமையில் ஆ. மகாலிங்கம், A. G. A. அவர்களின் ஆதரவுடன் செந்திநாதையர் ஞாபகார்த்த சபை ஆரம்பித்தபோது திரு. கணேசலிங்கம் நிகழ்த்திய வரவேற்புரையின் ஒரு பகுதி:

"நம்மிடையிற் சைவம் தழைக்க வேண்டில், காசிவாசி செந்திநாதையரின் நூல்களில் உள்ள கருத்துக்களை நாம் நன்கு அறிய வேண்டும். அவை போதிப்பனவற்றைச் சரியாக நடைமுறைப் படுத்த வேண்டும். அப்பெரியார் நமது குப்பிழான் கிராமத்திற் பிறந்தார் என்பது எமக்குப் பெருமை தருவதாகும். அவரை நாம் போற்றவேண்டும்" — என்பது.

திரு. கணேசலிங்கத்தின் தனிப்பட்ட முயற்சியால் செந்திநாதையரின் திருவுருவப் படங்கள் யாழ். பல்கலைக் கழகத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் திறந்து வைக்கப்பட்டன.

இன்னும் இவர் முயற்சியால், 1980இல் மேற்கொள்ளப்பட்டுக் கால நிலைமையால் தடையுண்டிருக்கும் 'செந்திநாதையர் மணிமண்டபம்' காரியமாகும் பேற்றை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆலயங்களில் திருமுறை ஓதல்

ந. சதாசிவஐயர்

ஆலயங்களில் திருமுறை ஓதுவோர் தொகை தற்போது அருகி வருகின்றது. தீபாராதனையின் பின் தேவாரம் ஓதுவதற்கு ஆட்களைத் தேடிப்பிடிக்க வேண்டியதாக உள்ளது. ஏதோ கடமைக்காக ஒரு தேவாரத்தையும் புராணத்தையும் மட்டும் அவசர அவசரமாகப் பாடிமுடிக்கும் நிலையே காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு ஆலயநிர்வாகசபையினரும் எந்த அளவுக்கு ஆலயவருமானத்திலும் ஆடம்பரமான திருவிழாவிலும் அளப்பரிய திருப்பணியிலும் ஆர்வமாக உள்ளனரோ அந்த அளவுக்கு ஆலயத்தில் திருமுறை ஓதுதலிலும் ஆர்வம் காட்ட வேண்டும்.

இன்று ஆலயங்களில் தீபாராதனையின் பின், ஒரு அந்தணர் வேதம் ஓத வேறு ஒரு அந்தணர் ஸ்தோத்திரம் பாட, குருக்கள் ஆசீர்வாதம் சொல்ல, சிறப்பாக வேதம் ஓதும் நிலை முன்னைய காலங்களை விட மேலோங்கியுள்ளதைக் காணலாம். ஆனால் வேதம் ஓதிய பின்னர் யாராவது ஒருவரைத் தேடிப்பிடித்து, 'தம்பி ஒரு தேவாரம் புராணம் பாடு' எனச் சொல்லுவிக்கும் நிலையே இன்று பல ஆலயங்களில் காணக் கூடியதாக உள்ளது.

இதற்குக் காரணம் ஆலயங்களில் திருமுறைக்கும் கூட்டுப்பிரார்த்தனைக்கும் முன்னுரிமை கொடுத்து அவற்றை ஓதுவிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படாமையும், திருமுறை ஓதுபவர்கள் கௌரவிக்கப் படாமையும், இளந் தலைமுறையினருக்கு ஆர்வம் ஊட்டாமையும் முக்கிய காரணங்களாகும். ஆலயத்திற்கு அண்மையில் வசிக்கும் திருமுறைவல்லார் ஒருவருக்கு முன்னுரிமை கொடுத்து அவரை அவ் ஆலயத்தின் ஓதுவாராக நியமித்தல் வேண்டும். அவரின் தலைமையின் கீழ் அவரால் நெறிப்படுத்தப்படும் வகையில் திருமுறை ஓதுதல், கூட்டுப் பிரார்த்தனை செய்தல் ஆகியவை நடைபெறல் வேண்டும். முன்னைய காலங்களைப் போல் திருமுறை ஓதுபவர்களை ஓதுவார்களாகக் கௌரவிக்கும் நடைமுறை மீண்டும் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

திருமுறை ஓத ஆரம்பிக்கும் போது ஓதுபவருக்குச் சிவாசாரியார் திருநீறு வழங்குவதும் திருமுறை ஓதி முடித்தபின் (காளாஞ்சி) பிரசாதம் வழங்கிக் கௌரவிப்பதும் என இருந்துவந்த நடைமுறை தற்போது ஆலயங்களில் இல்லாமற் போய்விட்டது. இதனை எல்லா ஆலயங்களிலும் மீண்டும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். எந்தக் கோயிலில் எந்தத் தேவாரத்தைத் தெரிந்தெடுத்துச் சொல்லலாமென்பதில்லை.

தேவாரம் எல்லாந் தேவாரந்தான், தெரிந்தெடுத்து என்பதற்கர்த்தமில்லை. சுப்பிரமணியர் சந்நிதிக்கு விசேடமாகத் திருமுறைக்குப்பின் திருப்புகழ் விதிக்கப்பட்டிருக்கிறது. மற்றைய சந்நிதிகளுக்கும் விசேடமாக வேண்டிய பதினோராந் திருமுறை, சிவபுராணங்களில் உள்ள துதிகளைச் சொல்லலாம். அதற்குமேல் அநாவசியமாம்.

திருமுறைகள் சிவாசாரியர் சொல்லும் போது மட்டும் தான் ஓதுவது என்பதனை விடுத்து கிரியைகள் ஆரம்பிக்கும் வரை கிரியைகளின் இடைவேளைகளில்கூட திருமுறைகளை ஓதலாம் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். அபிடேகம் நடைபெறும்போது வேதபாராயணம் செய்யும் முறை யாவரும் அறிந்ததே. அதே போன்று அபிடேகம் நடைபெறும் போது மேளவாத்தியத்தைத் தவிர்த்து திருமுறை ஓதுதல் சாலச்சிறந்தது என்பதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

□ ★ ★ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பண்ணுறத் தெரிந்த பைந்தமிழ் இசைக்கலை

சங்கீதபூஷணம் P. S. சந்திரசேகரம்

கலைச் சங்கீதத்தின் பாற்பட்டவை திருமுறைகள். திருமுறைகளைப் போற்றிய மன்னன் ராஜராஜசோழன். பண்பாட்டை வளர்க்கும் திருமுறைகள் நாலுமறைகளிலும் உயர்வானவை; இவை தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்து. திருநாவுக்கரசர் தேவாரம் நெஞ்சில் ஒளி வீசச் செய்கிறது. ஜாதிமத பேதத்தை ஒழித்துக் கட்ட வல்லது. திருமுறைகளை ஓதுமிடத்தில் இறைவன் எழுந்தருளுகிறான்; சந்தேகமேயில்லை.

கலைச்சங்கீதரீதியில் பூபாளராகத்தை இசைக்க ஊர்வலம் வருதலும், மத்திய மாவதிராகத்தில் நலுங்கும் மங்களமும் பாடுதல் பொருந்தும்.

"பண்ணொடு இசைபாடும் அடியார்க்கு மண்ணுலகும் விண்ணுலகும் மகிழ்ந்தளிப்பான்" என்கிறார் ஞானசம்பந்தர். இசைத்தவம், இசைத்தியானம், இசை அருச்சனை செய்து கொண்டிருக்கும் பேரின்ப நிலையை நமது சங்கீதக் கலைஞர்கள் பெற வேண்டும். கலைச்சங்கீதத்தின் கடைசி நிலை அதுவாகும். "கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமொடமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப்பசுந்தமிழ்"; இருந்து தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர். இவை மேற்கோள் கலைச்சங்கீதம் சாகாக் கலை.

அண்டசராசரங்களும் இசை கேட்டு லயித்துத் தத்தமக்குண்டான பகையைக் கூட மறந்து ஒருங்கே அணைந்து நின்றமைக்கு ஆனாய நாயனாரது புல்லாங்குழலிசை உதாரணமாக உள்ளது. சங்கீத இசை கேட்டு நெற்பயிர் மற்றும் செடிகொடிகள் கூட நன்கு வளர்கின்றன.

இந்தியாவில் "பூரி என்ற இடத்தில் உள்ள ஜெகன்நாதர் கோவிலில் நாள் தோறும் அன்னதானம். அதேபோல் இப்போது இலங்கையில் முழுப்பாடசாலைகளிலும் விசேடமாக, யாழ்ப்பாணத்தில் கலைச் சங்கீதம் நடனம்; அதுமாத்திரமல்ல, வீடுகள் தோறும் சங்கீதம் வீணை காற்சதங்கை ஒலி தாண்டவமாடுகிறது.

எல்லாராகங்களும் 7 ஸ்வரங்களுக்குள் அடங்கியவை. என்றாலும் ஒவ்வொரு ராகமும் தனித்தனி உழைப்பினால் ஸ்வரபேதங்கள் பல எழும். மனக்கண்முன் ராகங்களின் சொரூபத்தை நன்றாகத் தெரிந்து கொண்டே பெரிய வித்துவான்கள் மேன்மையான சங்கீதத்தைப் பாடினார்கள். ராகம் வேறு, கீர்த்தனம் வேறல்ல. ராகம் கீர்த்தனம் முதலிய சாகித்தியங்கட்கு அந்தர் பூதமாயுள்ளது. சரியான ராகம் ஏற்பட வேண்டுமானால் தியாகையர் கீர்த்தனங்களையும் பல தமிழ் உருப்படிகளையும் க்ஷேத்திரஜ்ஞர் பதங்களையும் நாம் நிறைய நிறையக் கற்றுக் கொண்டே அவைகளிலுள்ள ராகபாவத்தைக் கவனிக்க வேண்டும்.

நாயன்மார், சங்கீத மும்மணிகள், அருணாசலக்கவிரயார், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத்தாண்டவர் பாபநாசஞ்சிவன், மகாவைத்தியநாதஐயர் சதாசிவபிரமேந்திரர், புரந்தரதாசர், மாரிமுத்தாபி ஆகியோரது சாகித்தியங்கள் ஒரு நாடக சங்கீதத்தின் அரிய பொக்கிஷம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடைமை

இல்லறம் சிறப்பதற்கு அதிற் சம்பந்தப்படுவோர் ஒருவரில் ஒருவர் பரிவு கொள்ளும் மனஉணர்வு வேண்டும். அது அன்புடைமை ஆகும்.

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

ஒருவர் துன்புறக் காணில் மற்றவர்க்கு எண்ணாமலே கண்ணீர் வருவதுண்டு. அது அன்புண்மைக்கு அறிகுறியாகும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பில்லார் எல்லா விதத்திலுஞ் சுயநலம் பார்ப்பவராயிருப்பர். அதற்கெதிர் அன்புடையார் தமக்கு இன்றியமையாத ஒரு பொருள்கூட மற்றவர்க்கும் பயன்படவைக்கும் விருப்பமுள்ளவராயிருப்பர்.

3. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு.

அன்புசெய்தல் என்ற பண்புக்குப் பயிற்சிக் களமாம் நோக்கிலேயே உடலோடு உயிர்க்குத் தொடர்பு ஏற்பட்டது என்பார்கள் விஷயமறிந்தோர்.

4. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

அன்புசெய்தல் மூலம் ஒருவரிலொருவர்க்குப் பிரியம் அதிகரிக்கும். அதன் பேறாகத் தேடற்கரிய சிறப்புள்ள நட்புண்டாகும்.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

உலகவாழ்வில் ஒருவர் இன்பமாயிருக்கிறார் எனில் அது அவர் அன்புள்ளவராயிருந்த தன் பயன் என்றே கருதப்படும். அதாவது அன்பு செய்யத் தெரியாதவர்க்கு வாழ்வில் இன்பமிருக்காது என்பதாம்.

6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அறத்துக்கு மட்டுமே அன்பு துணையாகும் என்பர் அறியாதோர். ஆனால் பகைமை நீங்கவும் அதுவே துணை. அதவாது மனவிகாரத்தால் அன்பை மறந்து பகை கொண்டவரும் ஒருகால் மறந்த அன்பை நினையப் பகை நீங்குதலால், அற ஆக்கத்துக்குப் போல மற நீக்கத்துக்கும் துணையாவது அன்பே என்றபடி.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

எலும்பில்லாத புழுஉடலை ஏகமாக இருக்கின்ற வெய்யில் காய்த்து வருத்துவதுபோல் அன்பில்லா உயிரை அறம் வருத்தும்.

8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

அன்புக் கிடமளிக்காத உயிர்வாழ்க்கை என்பது பாலைவனத்தில் வற்றல் என்ற மரம் தளிர்விடுவது போலுமளவுக்கு மிகக் கஷ்டமானதாயிருக்கும்.

9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

இல்லறமென்ற உடம்பின் அக உறுப்பாகிய அன்பு இல்லாதவிடத்து இருவர்க்குப் புற உறுப்பாகிய இடம், பொருள், ஏவல் முதலியவற்றால் ஒரு பயனும் இல்லை.

10. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

இல்லறத்து அன்பின் வழிநின்று இயங்கும் உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பு இல்லையாயின் அது எலும்பின்மேல் தோல்போர்த்த ஒரு மாதிரி உடம்பளவாகவே கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரன் பழிதீர்த்த கதை

மின்பயில் குலிசப் புத்தேள் விருத்திரா
சுரனைக் கொன்ற
வன்பழி விடாது பற்றக் கடம்பமா வனத்தி
லெய்தி
யென்பர வாரம் பூண்ட விறைவனை
யருச்சித் தேத்தித்
பின்பது கழிந்து பெற்ற பேற்றினை
யெடுத்துச் சொல்வாம்.

(திருவிளையாடற் புராணம்)

முன்னொரு காலத்தில் இந்திரன் இந்திராணி சமேதனாய், தேவலோகத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்போது, தேவ மாதர்கள் பலவித பாடல் ஆடல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அவைகளைக் கண்டு இந்திரன் மயங்கியிருந்தான். அந் நேரம் தேவர்குருவாகிய வியாழ பகவான் வந்தபோது, அவன் அவரை மதியாமலும், மரியாதை செய்யாமலும் இருந்து விட்டான்.

வியாழ பகவான் பேசாமல் மன வருத் தத்துடன் போய்விட்டார். அதனால் இவ னுடைய செல்வங்கள் வரவரக் குறையத் தொடங்கின. இதன் காரணம் குருவை மதியாமல் விட்டதுதானென்று இந்திரன் அவரை மூவுலகிலும் தேடினான். ஒரு இடமும் அவரைக் காணவில்லை.

பிரமதேவரிடம் சென்று விஷயத்தைச் சொன்னான். அவர் 'துவட்டா புத்திர னாகிய திரிசிரன் என்னும் விச்சுவரூபனைக் குருவாய்க் கொண்டு உன்காரியங்களைப் பார்' என்று வஞ்சமாய்ச் சொல்லி அனுப்பி விட்டார். இந்திரன் அப்படியே அவனைக் குருவாகக் கொண்டு ஒரு யாகம் செய்தான்.

விச்சுவரூபன், அசுரர்க்கு நன்மையும், தேவர்க்குத் தீமையும் விளையக்கூடிய கருத்துடன், உள்ளொன்றும் வெளியொன்று மாய்க் கபடமாய் யாகம் செய்வதை, மந் திர உச்சரிப்புக்களால் இந்திரன் அறிந்து தனது வச்சிராயுதத்தால் அவன் தலை மூன்றையும் வெட்டி விட்டான்.

இதனை யறிந்த அவன் பிதா துவட்டா என்பவன், ஒரு யாகத்தைச் செய்ய, அதில் இருந்து விருத்திராசுரன் தோன்ற, இந்தி ரன் மேல் பழிவாங்கி வரும் பொருட்டு அவனை ஏவினான். அப்படியே இந்திர னும் விருத்திராசுரனும் போர் செய்தனர். கடைசியில் இந்திரன் வச்சிராயுதத்தை ஏவினான். அது அவனை ஒரு தீங்கும் செய்ய முடியவில்லை.

இந்திரன் போய்ப் பிரமதேவனிடம் முறையிட, அவர் விஷ்ணு மூர்த்தியிடம் அழைத்துச் செல்ல, விஷ்ணு 'ததீசி மகா முனிவரின் முதுகெலும்பைப் பெற்று, அதை வச்சிராயுதமாக்கி யுத்தம் செய்க' என்றார். அப்படியே அம் முனிவரிடம் பெற்று அதை வச்சிராயுதமாக்கி, விருத்திராசுரனைத் தாக்க, அவன் சமுத்திரத்தில் ஒளித்து விட்டான்.

சமுத்திரத்தில் எங்குந் தேடியும் காணாமல், அகத்திய முனிவரிடம் சென்று முறையீட்டான். அவர் கடலைக் குடிக்க, விருத்திராசுரன் காணப்பட்டான். உடனே, இந்திரன் வச்சிராயுதத்தை எறிந்து கொன்று விட்டான்.

அவனைக் கொன்றதால் இந்திரனைப் பிரமகத்தி தொடர, பயந்து போய் ஒரு குளத்தில் தாமரைத் தண்டில் ஒளித்திருந் தான். அப்பொழுது தேவர்கள் தங்களுக்கு அரசனில்லாமையால் வியாழ பகவானிடம் முறையிட, அவர் இந்திரன் இருக்கு மிடத் தையும் சென்று, அவனையும் அழைத்துக் கொண்டு, கைலை, காசி, கங்கை முதலிய தலங்களைத் தரிசித்த பின் கடம்பவன மாகிய மதுரைக்குப் போய், பிரமகத்தி யைத் தீர்க்கும் வகையையும் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே அவர்கள் செய்து மதுரையில் வந்து சிவலிங்கப் பெருமானை வழிபட்டு, அவர் அருள் பெற்று இந்திரன் பழிநீங்கி, சுவர்க்கலோகம் சென்று மீண்டும் தேவ ராசனாக இருந்து ஆண்டு வந்தான். இக் கதையில் ததீசி மகா முனி முதுகெலும்பு கொடுத்தது, அகத்தியர் கடலைக் குடித்தது, விருத்திராசுரன் கடலுள் ஒளித்ததாகிய மூன்று கதைத் தொடர்கள் இருக்கின்றன.

(உட்பொருள்-குரு முதலாகிய பெரியோர் கள் மனம் வருந்த, மதியாமல் அலட்சியம் செய்தால், அவர்களுடைய முனிவு பல கஷ்ட நஷ்டங்களைக் கொடுக்கும்.)

ஆக்கம் - சைவ இலக்கிய கதாமஞ்சரி

## இதய கமலத்தில் இறைவன்

எந்தவேளையும் இறைவனை நினைக்கவேண்டும். அது உன்னால் ஆரம்பத்தில் முடியவில்லையானால் மூன்று வேளைகளில் தவறாமல் நினை.

- எழுந்தவுடன் இறைவனை ஒருக்கணமாவது நினை.
  "இறைவனே! இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் செய்" என்று தொழு.

- உணவு உட்கொள்ளும்போது நினை.
  "இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள்புரி" என்று தொழு.

- படுக்கும் போது நினை.
  "இறைவனே! இந்த உறக்கத்திலே உன்னுடைய எண்ணமே நிற்க அருள்" என்று தொழு.

உன்னை யாராவது புகழும் போது மகிழ்ச்சியடையாதே. அதேபோல் இகழும் போது கவலையுமடையாதே. இகழையும் புகழையும் சமமாகக் கருது. அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

கிருபானந்தவாரியார்

## ஏழு கொடுமையான பாவங்கள்

- வேலையின்றிப் பெறும் செல்வம்
- மனச்சாட்சியின்றி அனுபவிக்கும் மகிழ்ச்சி
- ஒழுக்கமின்றி இருக்கும் அறிவுத்திறன்
- தியாகமற்ற முறையில் செய்யும் வியாபாரம்
- மனித நேயமற்ற விஞ்ஞானம்
- தியாகம் கலவாத பக்தி
- கொள்கைகள் அற்ற அரசியல்

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு

# சந்திரன்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஆனால் கவிஞர்களும் கலை ஆர்வலர்களும், பெரியோர், சிறுவர்களும், காதலர்களும், கந்தர்வர்களும், சந்திரோதயத்தைக் கண்டதும் அளவற்ற மகிழ்ச்சிகொண்டு இன்புறுகிறார்கள். இதுவும் தாய்க்கிழவியின் வரபலனேயாம்.

நவக்கிரகங்களுள் பூமிக்குச் சமீபமாக இருப்பதே சந்திரன். பூமியின் உபகிரகமுமாகிறது. சந்திரன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு பூமியையும் சுற்றி வருகிறது. அதனால் சந்திரனின் ஒரு பாகமே எப்பொழுதும் பூமிக்குத் தெரியும் நிலை ஏற்படுகிறது. சந்திரனது குறுக்களவு 1080 மைல்கள் என்றும் பூமியிலிருந்து இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மைல் தொலைவில் உள்ளதென்றும் சோதிட நூல்கள் எப்போதோ தெரியப்படுத்தி விட்டன.

சூரியன், சந்திரன், பூமி, ஆகியன மூன்றும் ஒரே நேர்கோட்டில் காணும்போது சந்திரனது சலன அமைப்பின் பிரகாரம் சூரிய கிரகணமும் பூமியின் சலன அமைப்பிற்கேற்ப, சந்திர கிரகணமும் ஏற்படுகிறது.

பெண்ராசிக் கிரகமான சந்திரன் சர கிரகமாக சரராசியான நண்டுவடிவான கர்க்கடகராசிக்கு ஆட்சி அதிபராகி, கிரககாரத்தில் மாதுருகாரனாகவும் வெண்மை நிறமான படிகநிறத்தோடு இரத்தினங்களில் "முத்து" மணியை விரும்புபவராகவும் சாத்வீக குணத்தோடு தித்திப்புச் சுவையை விரும்புபவராக்வும் கிரக அங்கங்களில் முகத்தைச் சார்ந்தவராகவும், இராசி அங்க லட்சணத்தில் தோள்களுக்குரியவராகவும் செயற்படுகின்றார்.

சந்திரன், கன்னி, தனு, மீன, மிதுன ராசியில் நட்புடனும், இடபராசியில் உச்சமாகவும், ஏனைய ராசிகளில் பகையுமாக இருப்பார். விருச்சிகராசியில் நீசமாகவும் இருப்பார். சந்திரன், சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி ஆகிய கிரகங்களிற்குச் சத்துருவாகவும், புதன், வியாழன் கிரகங்களில் மித்துருவாகவும் உள்ளார்.

சந்திரன் அத்ரிரிஷிக்கும் அனுசூயா தேவிக்கும் நந்தனவருடக் கார்த்திகையில் சுத்த சதுர்த்தசியில் கார்த்திகை நட்சத்திரத்தில் ஜனித்து கடகராசிக்கதிபதியானார். திங்கட்கிழமைக்கு உரியவராவர். சோதிடத்தில் சந்திரன் வைசிய குலத்தவர் என்றும், குணத்தில் சத்வகுணம் கொண்டவர் என்றும், ராஜஉத்தியோகத்தில் இருப்பவர் என்றும் அதிதேவதையாக ஈஸ்வரனையும் பிரத்தியதி தேவதையாகக் கௌரியையும் கொள்பவரென்றும் உளது. வடமேற்கு திசாபதியாகவும், பூதாதிபதிகளில் அப்புவையும், வித்தையில் தமிழையும், தாதுவில் இரத்தத்தையும், பால அவஸ்தையும், மூத்துவாகனமும் கொண்டிருப்பார். இஷ்டகாலமாக அபரான்னத்தையும், சுவையில் உப்பையும், சுபாவத்தில் ஸௌமியமாகவும் காணப்படுபவர். சந்திரனிற்கு நெல் தானியமும், பலாச்சமித்தும், வெள்ளாம்பல் மலரும், சதுரமான பீடமும் பிரியமாகும். லோகத்தில் வெண்கலமும், தானத்தில் சங்கும், வஸ்திரத்தில் வெண்பட்டும் பிரீதியானவை. சந்திரன் மன்மதனது வெண்கொற்றக் குடையாகவும் விளங்குபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனது காலால் சந்திரன் தேய்க்கப் பெற்றவரெனினும் அவரது திருமுடியில் சூடப்பெற்று "பிறைசூடிய பெருமான்" என்ற பெருமைக்கும் ஆளானார். வில்லி பாரதத்தில் சந்திரன், திருமாலின் இதயத்தில் பிறந்தவன்; நாளும் நட்சத்திர மங்கையரைக் குலாவுபவன்; வானவருக்கு அமுதளிப்பவன்; சிவனது திருமுடியில் சேர்ந்தவன்; பதினாறு கலைகள் உடையவன் என்றும் எவ்வாறாயினும் ஓர் ஜீவன் இருபத்தேழு நக்ஷத்திரங்களில் எதிலாவது பிறந்தேயாக வேண்டும் என்றுமுளது. இதனால் சந்திரனிற்கு "சர்வசந்திரகலாபிதம்" என்று சிறப்பித்தும் முதன்மை ஸ்தானத்தையும் "தேவகேரளம்" என்ற நூல் சிறப்பிக்கின்றது. சந்திரன் ரோகிணியோடு சுகித்து கிருஷ்ணன் பிறப்பு உண்டானது. அதேபோல கிருத்திகையோடு சுகித்து "கிருத்திகை பாலன்" பிறப்பும் மேன்மைகொண்டது,

வேதசாஸ்திரங்கள் உலகெங்கும் அரசோச்சிய காலங்களில் சந்திரனது மகிமையும் மேலோங்கிநின்றது. இந்துக்களைப் போன்று முஸ்லீம்களும் சந்திரனைத் தொழுதே பண்டிகைகளை இன்றும் கொண்டாடுகிறார்கள். அவர்களது பச்சைக்கொடியில் சந்திரப் பிறையைக் காணலாம். சூரியவம்சத்தவர் போன்று சந்திர வம்சத்தவர்களும் உள்ளனர். சந்திரவம்சத்து மன்னர்கள் பாண்டியமன்னர்களே.

யோகிகள் இடைகலை மூச்சைச் சந்திர கலை என்பர். யோகசக்தியினால் மூலாதாரத்து அக்கினியை எழுப்பி ஆறு ஆதாரங்களையும் கடந்து சந்திரமண்டலத்தில் தாக்கச் செய்து அவ்வப்போது பெருகும் அமுதைப் பருகினால் ஆனந்தம் உண்டாகும் என்பர். அவ்வப்போது "மூலாதாரத்து மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்தே" என ஔவையும் சிறப்பித்துள்ளார். சிவபெருமானது இடது கண்ணாகவும் சந்திரன் விளங்குகிறார். சந்திரனுக்குத் தனிக்கோவில்கள் இல்லையாயினும் மதுரையில் சோமசுந்தரக் கடவுளைச் சந்திரனாகவும் வழிபடுகின்றனர். முன்பு பூம்புகாரில் "நிலாக்கோட்டம்" என்று சந்திரசேகரர் இருந்ததென அறியப்படுகின்றது.

திருவையாறு ஊரிலிருந்து எட்டு மைல் தூரத்தில் "திங்களூர்" என்ற தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமுண்டு. சந்திரனது பெயரில் இந்தக் கிராமமும் உருவானது. இங்கு இறையடியார்களைப் போற்றியே பலன் பெறுகிறார்கள்.

அடுத்து, திருப்பதியில் வெங்கடாசலபதியின் அருட்திருமேனியில் சந்திரனது அருளும் நிறைந்துள்ளது. திருப்பதியானை வணங்கிச் சந்திரனது அருள் பெறலாம் எனவும் சாஸ்திரங்கள் கூறும்.

சந்திரன் மனித உடலில் ஆதிக்கம் செலுத்துவதைப் பற்றி அரிஸ்டாட்டில் பல கருத்துக்களைக் கூறியுள்ளார். கோள்களின் கதியை நன்கு அறியாது எந்த மருத்துவராலும் முறையான மருத்துவம் செய்ய முடியாது என்று மருத்துவத் தந்தை ஹிப்போகிரட்டிஸ் கூடக் கூறிவிட்டார். மனக்கோட்டத்திற்கும், நிலாவொளிக்கும் தொடர்பு இருப்பதாக கூறும் கருத்துகள் பற்றி இன்னும் விவாதங்கள் உண்டு. ஆங்கிலத்தில் 'லூனா' (LUNA) என்றால் சந்திரன்; லூனாட்டிக் (LUNATIC) என்றால் பைத்தியம். இந்தப் பைத்தியம்கூட, சந்திர கிரகணத் தாக்குதலாலும் உண்டு என வைத்திய சாஸ்திரமும் கூறுகிறது.

உலகெங்கும் வேதசாஸ்திரங்கள் பரவி நின்று வேதநெறி ஆட்சிசெய்த போது மிலேச்சர்களும் நீசக்கிரகங்களால் உந்தப்பட்ட நவீன கர்த்தர்களும், நாதர்களும் தத்தமது மேலாண்மைகளால் வேதநெறி வாழ்ந்தோரைத் துன்பப்படுத்தினர்; கொன்றொழித்தனர். இருந்தும் பாரதம் தப்பியது. தப்பியதனால்தான் இன்றும் நாம் சந்திர கிரணங்களால் நல்லமுதைப் பெற முடிகிறது. இருப்பினும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பழம் பரம்பரை நீசர்களது வாரிசுகள் தருணம் பார்த்துக்கொண்டு அமசடக்கத்துடன் வெகு தந்திரமாக நரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வைத் துணைக்கொண்டு எமது வேத நெறி வாழ்வைக் கெடுக்க முனைகிறார் கள். எனவே எமது மனத்திற்குத் துணை யாகத் திருவருள் தரும் சந்திரனை நாம் ஒவ்வொருவரும் வழிபட்டு, எம்மை இரட் சிக்குமாறு பிரார்த்திப்போமாக.

சோமவார விரதமிருந்து பார்வதி யின் திருவருளுக்கு ஆளாகுவோமாக. பௌர்ணமி விரதமிருந்து அம்பிகையின் திருநோக்கால் அளவற்ற செல்வங்களைப் பெறுவோமாக. கார்த்திகைமாத சோம வார விரதத்தையும், சித்திரைமாதப் பௌர்ணமி விரதத்தையும் அநுட்டித்து நாமும் எமது நாடும் நலன்பெற வழிபடு வோமாக.

சந்திரகாயத்திரி மந்திரம், சந்திர கவசம், அஷ்டோத்தர அர்ச்சனை என்றெல் லாம் நடாத்தி அனைவரும் சந்திரபலம் பெறப் பிரார்த்திப்போமாக.

ஊற்றெடுக்கும் ஜலங்களில் ஜலாபிமான தேவதைகள் கூடி நிற்கும். ஒஷதீசனான சந்திரன் ஒஷதிகளின் சத்துக்களைப் புண் ணிய தீர்த்தங்களில் சேர்த்து விடுகிறது. அதிகாலை வேளையில் சந்திரனது அமிர்த ரசம் ஜலங்களில் சேரும்போது, ஸ்னானாதிகளைச் செய்யின் நோய்நொடி யில்லாது ஆரோக்கியமாக நீண்ட ஆயு ளோடு வாழலாமென சாஸ்திரங்கள் இயம்புகின்றன. நாம் ஸ்னானம் செய்யும் போது

"பத்மத்துஜாய வித்மஹே,
ஹேமரூபாய தீமஹி
தன்ன: ஸோம: பிரசோதயாத்"

என்ற சந்திரகாயத்திரியை ஜபித்துக் கொண்டு சகல ஐஸ்வரியங்களையும் பெறச் சங்கற்பிப்போமாக.

சந்திரன் பூர்ணகலைகளுடன் காணும் போது தேவர்கட்கும், இருடிகளிற்கும், மனி தர்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறார். அதனால் தான் அன்றைய தினங்களில் அம்பிகை வழிபாடு, ஸத்யநாரா யண பூசை, தீபதரிசனம் என்பவற்றை மக்கள் செய்கிறார்கள்.

க்ஷீணகலைகளுடன் இருக்கும் காலங் களிலும் ராகு, கேது சம்பந்தமான கிரகண காலங்களிலும், சந்திரன் பிதிர்களிற்கு அளவிலா சந்தோஷத்தைக் கொடுக்கிறார். அதனிமித்தம் அக்காலங்களில் பிதிர் தர்ப்பணங்களை சைவசமயிகள் செய்து பிதிர் வழிபாடுகளைச் செய்கிறார்கள்.

சந்திரன் தன்னை வழிபடுபவர்களது ஆயுள்காலத்தை நீடிப்பான். பகைமைகளை யழித்து செல்வங்களைப் பெற உதவுவான்.

"அலைகடல் அமுதம் தன்னில்
அன்று வந்து உதித்து மிக்க
கலைவளர் திங்கள் ஆகிக்
கடவுளார்க்கு அமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பங்கன்
செஞ்சடைப் பிறையாய்! மேரு
மறை வலமாக வந்த
மதியமே போற்றி போற்றி"

சந்திரன் தக்ஷப்பிரஜாபதியின் சாபத் தால் ஒரு சமயம் க்ஷயரோகத்தால் தீராத துன்பத்திற்காளானபோது, அதனின்றும் விடுபட ஸ்ரீகாளஹாஸ்தீஸ்வர சன்னிதா னத்தில் கடுந்தவம் செய்து நோன்புற்றிருந் தார். இவரது ஆராதனைகளை யேற்ற சிவபிரான் சந்திரனது துயரைநீக்கி, நக்ஷத் திர மண்டலத்தின் இராஜனாக அமர்த்தி னார். சந்திரன் பிரதிஷ்டைசெய்து வழி பட்ட இலிங்கம் "சந்திரலிங்கமென்றும்" இவரால் தோற்றுவிக்கப்பட்ட தீர்த்தம் "சந்திரபுஷ்கரணி தீர்த்தம்" என்றும் இன் றும் விளங்குகிறது.

( தொடரும் – "செவ்வாய் கிரகம்" )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சந்தேகம் தெளிதல்

# இந்து மதச் சடங்குகளில் விவாகம் சம்பந்தமான சந்தேகங்களுக்குப் பதில் கூறுகிறார்


கரணவாய், சைவசித்தாந்த ஆராய்ச்சிக் கழகத் தலைவர்,
அருள்மிகு வேதாரணிய ஆதீன சபை முதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் அவர்கள்


( சென்ற மாதத் தொடர்ச்சி )

11. கேள்வி :- பிதிர் வழிபாடு செய்யாமல் தாலி கட்டுதல் மாங்கல்ய தாரணம் செய்தல் கூடாது என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மை தானா - அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறவேண்டும்?

பதில் :- உங்கள் கேள்வி மிக நல்லது. அப்படிச் சொல்லுவது உண்மைதான். அது எவ்வாறெனில் விவாக காலத்தில் நாந்திமுகசிரார்த்தம் என்று ஒரு கிரியை நடைபெறும். அக்கிரியை முறை பிதிர் வழிபாட்டைக் குறிக்கும். பிதிர்களின் ஆசீர்வாதம் வாழ்க்கை நலன்களிற் சர்வமுக்கியத்துவம் பெறும் என்பது இதன் தாற்பரியம்.

12. கேள்வி :- கோத்திரம் கூறுவதில் வைதீகத்துக்கும் சைவத்திற்குமிடையில் உள்ள வேறுபாடு பற்றி எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அந்தச் சந்தேகத்தை வெளிவிடுகிறேன். குறைவிளங்காது விளங்கப்படுத்துவீர்களா?

பதில் :- வைதீகத்தில் அறுவகைக் கோத்திரக் கொள்கை உண்டு. சைவத்தில் அது இல்லை. அதற்குத்தக அது வேறுபடுகிறது. வைதீக மணத்தில் கோத்திரம், சூத்திரம், பிரவரம் எல்லாம் சொல்வர். சைவத்தில் தந்தை வழிமரபு மட்டும் சொல்லப்படும்.

13. கேள்வி :- கன்னிகாதானம் செய்து கொடுக்கும் சந்தர்ப்பம் பல இடங்களில் பல மாதிரி இருக்கிறது. குழப்பமாக இருக்கிறது. இது எச்சந்தர்ப்பத்தில் நிகழ வேண்டும்?

பதில் :- கோத்திரம் சொன்னபின்தான் கன்னிகாதானம் செய்யப்பட வேண்டும். அதன் வரிசையில் தாலிகட்டுதல் நிகழ வேண்டும். இதுதான் ஆகமவழிக் கிரியை முறையாகும். வைதீகமுறைகள் ஆங்காங்கு வித்தியாசப்படுவது அவரவர் ஸ்மிருதிப்படிக்கு. அதுபற்றிச் சைவர்கள் குழப்பமடைய வேண்டியதில்லை.

14. கேள்வி :- அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் எதற்காக - சுருக்கமாகக் கூறவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :- அம்மியில் பெண்ணை ஏற்றி நிற்கவிட்டு, அப்பெண்ணுக்குக் கற்பு நிலையில் மனம் கல்போல் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் செய்ய வேண்டும். அதற்காக அம்மி மிதித்தல் நிகழ்ச்சி நடைபெறும். ''அருந்ததி காட்டுதல் என்ற நிகழ்ச்சி அருந்ததி – வசிட்டர் எப்படிப் பிரியாது இருக்கிறார்களோ அவ்வாறு இருப்போம்'' என்று சத்தியப்பிரமாணம் செய்து கொள்வது.

15. கேள்வி :- அரசாணி என்று ஒரு முள் முருங்கை நடுகிறார்கள் – அதன் விளக்கம் என்ன?

பதில் :- இதனை மாப்பிள்ளை பெண்பிள்ளை இருவருக்கும் முன்பாக எல்லாவற்றையும்விடத் துலாம்பரமாகத் தெரிய நடவேண்டும். அதைச் சீலையால் சுற்றிவிட வேண்டும். இது மாப்பிள்ளைக்கு அறிவுறுத்துவதற்காக நடப்படும். தன் மனைவியைத் தவிர, பிறர் மனைவியை மனதாலும் தீண்டக்கூடாது என்பது அர்த்தமாகும்.

16. கேள்வி :- பால், பழம் கொடுக்கிறார்கள் – ஏன்?

பதில் :- நல்ல சுபமுகூர்த்த வேளையில் பெண் பிள்ளையின் கையால் ஆணும் மாப்பிள்ளையின் கையாற் பெண்ணும் பால்பழம் பரிமாறுதலில் அவர்கள் சதாகாலமும் பாலும், பழமும்போல இனிமையோடிருக்க வைக்குங் குறிப்புண்டு.

17. கேள்வி :- பசுவைக் கொண்டுவந்து நிறுத்தி மாப்பிள்ளை பெண்பிள்ளையை வழிபடும்படி செய்கிறார்களே – இது அவசியமா? எதற்காக?

பதில் :- பசு தர்மத்தின் வடிவு. முப்பத்துமுக்கோடி தேவர்களும் கடவுளும் அதை உறைவிடமாகக் கொண்டிருக்கிறார்கள். செல்வத்திற்கு அதிபதியான லட்சுமியும் பின்புறத்தில் வீற்றிருக்கின்றாள். இல்லற தர்மத்திற்குப் பொருள் வேண்டும். தர்மம் சிறக்க நன்மக்கள் வேண்டும். ஆகவே எல்லா லக்ஷ்மிகரங்களுக்காகவும் பசுதரிசனம் நிகழ்கிறது.

18. கேள்வி :- ஆலத்தி எடுப்பதன் விளக்கம் என்ன?

பதில் :- ஆலத்தி பழத்தில் திரிவைத்தும் சோற்றில் திரிவைத்தும் இரண்டுவகையாக எடுக்கப்படுகிறது. மனுஷருக்கு ஆலத்தி எடுக்கும்போது சோற்றாலும், இறைவனுக்கு ஆலத்தி எடுக்கும்போது பழத்தாலும் எடுக்க வேண்டும். இதோடு மஞ்சள் குங்குமமும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

19. கேள்வி :- அறுகரிசி போடுகிற ஒரு மங்கள நிகழ்வு நடைபெறுகிறது. இதன் விளக்கமும் விதியும் சொல்லவேண்டும்?

பதில் :- ஆம், அறுகரிசி போடுவது மணமக்களை எல்லோரும் வாழ்த்தும் பொதுச் சந்தர்ப்பமாகும். இதைத் தலை, தோள், முழங்கால் என்ற ஒழுங்கிலிட்டு வாழ்த்த வேண்டும்.

(முற்றும்)

குறிப்பு:—

மங்கல காரியங்களில் தலைக்கு முதன்மை என்ற நிலைக்கு இது சரி. நடைமுறையில் இது மாறாயிருப்பதேன்? அறிந்தோர் இதுபற்றி இந்து தர்மத்துக்குத் தெரிவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்து தர்மம்" சஞ்சிகை

## அச்சிட நிதி உதவியோர்

மலர் 1 : திரு. ந. தெய்வேந்திரன்

மலர் 2 : உடுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 3 : நல்லூர் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 4 : இணுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 5 : பருத்தித்துறை வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 6 : சுன்னாகம் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 7 : திருநெல்வேலி வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 8 : குப்பிழான் வாழ் இந்து சமய அபிமானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நல்லறம் வளர்த்த நாயகத் துறவி

# ஸ்ரீ பரமானந்தசுவாமி

சீர்மிகு மீழத் திருநா டதனின்
ஏர்கொள் சிரமென இலங்கு யாழ்நகர்
வடபா லுறையும் வளமார் நற்பதி
வடம ராட்சி வான்புகழ் மண்ணில்
பசுப தீஸ்வரன் பரம்பொரு ளருளென
அசைவற விளங்கு மாச்சிரம மதுவாம்
ஸ்ரீபர மானந்தா செம்மைசால் பெயரது
பெயரினுக் கேற்ப பெருமைதன் னகத்தது
ஆதர வற்றோரை அனுதின மணைத்து
அனாதரட் சகனாய் அமைந்தறக் கோயில்
நல்லறப் பூங்கா சொல்லரும் சுரபி
இத்தகு பெருமை யிலங்குமாச் சிரமத்து
உத்தமத் துறவியாய் உயிர்ப்பற் றுடையனாய்
நித்திய பரசிவ னிழலடித் தொண்டனாய்
நல்லறம் வளர்த்த நாயகத் துறவி
சொல்லரும் ஸ்ரீபர மானந்த சுவாமி
எல்லையில் பிறவிப் பெருங்கடல் நீந்தி
பன்னரும் பரமானந்த வாரிதி படிந்தார்
நல்லவர் வதியு மிம்மா நிலந்தன்னில்
பல்லற மவர்வழிப் பேணுதல் நம்கடன்
பரமானந்த சுவாமிகள் பரப்பிய அருளொளி
உருவா யருவாய் உளதாய் நிலவுறத்
தருவா யருளெனத் தற்பரனை வேண்டி
இந்து சமயப் பேரவை யினர்யாம்
இந்து தர்ம ஏடவிழ் மலர்கொடு
ஏத்திப் போற்றுதும் இறைமலர்த் தாளே.

— சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம்

**இந்து சமயப் பேரவைத் தலைமைக் காரியாலயம்**
**375, கோயில் வீதி, நல்லூர்.**

விற்பனையாகும் இடங்கள் : பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.
சிவம் மெடிக்கல், சாவகச்சேரி.

இச்சஞ்சிகை, யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் அவர்களால், ஏழாலை, மஹாத்மா அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 21 - 05 - 95 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org